
# வதங்காத மலரொன்று



மாத்தறை ஹீனா வஹாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதங்காத மலரொன்று

(குறு நாவலும் ஒருபக்கச் சிறு கதைகளும்)

Deen Gaffoor - 31-07-1993.

மாத்தளை ஹஸீனா வஹாப்

தமிழ் மன்றம்

தமிழ் மன்றம்
(கல்ஹின்னை)
இல. 10, நாலாவது லேன்,
கொஸ்வத்த ரோட்,
இராஜகிரிய
ஸ்ரீ லங்கா.

விலை இலங்கை ரூபா 40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'VATHANKAATHA MALARONTRU'
(A short novel and twelve mini-short stories)

by

MATARA HASEENA WAHAB (c)
(Mrs. Haseena M. Muzzammil nee A.W. Haseena)

Address :
'Rifca Manzil',
No : 256/B, Hapugahayatatenne,
Handessa,
Shri Lanka,

First published in July 1992.

Sixty second publication of :
THAMIL MANRAM,
(Galhinna, Kandy)

Address :
No : 10, Fourth Lane,
Koswatta Road,
Rajagiriya,
Shri Lanka.

Printed at :
ARROW PRINTS,
No : 73, Valluvarkottam High Road,
Nungambakkam,
Madras - 600034,
South India.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் 'வதங்காத மலரொன்று'

நான் —

இவ்வுலகில் அடியெடுத்து வைக்கக்
காரணமாயிருந்த என் தந்தை
எம்.ஏ.ஏ. வஹாப்

இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்தபோது
என்னை அன்போடு ஆதரித்த என் மாமா
ஏ.எல்,எம். இப்றாகீம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

கண்டியில் கடமையாற்றியபோது
எனக்கு ஆதரவாயிருந்த
அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. ஹஸன்
(ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி)

கல்முனைக்கு இடம் மாறியபோது
என்னை ஆதரித்த
மருதமுனை ஏ-எச்.எம். மஜீத்
(கல்முனை வடக்கு ககாத்தணி அதிபர்)

ஆகியோருக்குச்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியையின் நன்றிக்குரியோர்

* இதில் இடம்பெறும் ஆக்கங்களை பிரசுரித்த பத்திரிகைகள், அவற்றின் ஆசிரியர்கள்
* அல்ஹாஜ் தமிழ்மணி எஸ்.எம்.ஹனீபா, சட்டத்தரணி
* திருவாளர் அ. பாலசுப்பிரமணியன், அரோ பிரிண்ட்ஸ்
* ஜனாப் ஏ.எல்.எம்.ஏ. நஸீர், உதவி சுங்க அத்தியட்சகர்
* டாக்டர் எம் பி.எம். அஜ்வாத், மாவட்ட வைத்திய அதிகாரி
* திருவாளர் க. வையாபுரி, ஃபாமஸி ரெக்ஸ், கண்டி
* திருவாளர் எஸ். அருளானந்தன், தினகரன் ஆசிரிய பீடம்
* ஜனாப் அன்பேரியா ஹனீபா, தொழில்நுட்ப உதவிக்குழு
* டாக்டர் எம்.ஏ.எம். ஃபாஸி, அரசு கால்நடை வைத்தியர்
* திருவாளர் ஏ. மொறாயஸ், ஓவியர்-வீரகேசரி
* ஜனாப் ஏ.எம் முஸாதிக், அதிபர், மருதமுனை
* ஜனாப் எம் எஃப் ஹிபத்துல் கரீம், கிழக்கு பல்கலைக்கழகம்
* ஜனாப் யூ எல்.எம். யூசுப், மருதமுனை, பொது நூலகம்
* ஜனாப் எம்.எஸ். ஜலீல், மருதமுனை, பொது நூலகம்
* ஜனாப் எம்.எம். நௌபல், மருதமுனை
* அல்ஹாஜ் எம்.ஐ.எம். முஸாதிக், ஆசிரிய ஆலோசகர் கண்டி
* இந்நூல் வெளியீட்டுக்கு ஆர்வமூட்டிய ஏனையோர் அனைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே . . .


| | | |
|---|---|---|
| பதிப்புரை | ... ... | 1 |
| அணிந்துரை | ... ... | 3 |
| என்னுரை | ... ... | 7 |

ஒரு பக்க சிறுகதைகள் :—

| | | |
|---|---|---|
| 01. | உபாயங்கள் ... ... | 9 |
| 02. | தீர்மானம் தீர்க்கமானதல்ல ... ... | 12 |
| 03. | உறங்காத உண்மை ... ... | 16 |
| 04. | நாடகமே உலகம் ... ... | 19 |
| 05. | அறுவடை ... ... | 21 |
| 06. | பரிகாரங்கள் ... ... | 24 |
| 07. | சந்தேகம் என்பது . . . ... ... | 27 |
| 08. | ஆசைகள் ... ... | 29 |
| 09. | வழி தெரியாதவன் ... ... | 32 |
| 10. | விடிவை நோக்கி . . . ... ... | 34 |
| 11. | பெரிய குறை ... ... | 36 |
| 12. | தடுமாற்றம் ... ... | 39 |

குறு நாவல் :—

| | | |
|---|---|---|
| வதங்காத மலரொன்று | ... ... | 42 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இலங்கையின் பெண் எழுத்தாளிகளில் பிரசித்திபெற்று வரும் ஒருவரான சகோதரி ஹஸீனா வஹாப், சிறந்ததோர் படைப்பாளி என்பதைப் படிப்படியாக நிரூபித்து வருகிறார். அவரின் ஆக்கங்கள், பிரதானமாக இலங்கையின் பிரபல தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இடம் பெற்று வருகின்றன. இரு தசாப்தங்களுக்கு மேலாக எழுத்துப் பணியில் ஈடுபட்டிருக்கும் அவர், பல போட்டிகளில் பங்குப் பற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளார். முஸ்லீம் மாதர் ஆராய்ச்சி, செயல் முன்னணி அண்மையில் நடாத்திய தமிழில் எழுதும் பெண் எழுத்தாளர்க்கான சிறுகதைப் போட்டியின் பின்னணியில் இயங்கிய போது, போட்டிக்கு வந்த சிறுகதைகள் அனைத்தையும் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதில் ஹஸீனா எழுதிய 'சுமைகள்' ஆழமான கருத்துக்களைச் சுருக்கமாகவும் எளிய நடையிலும் தந்திருந்ததைக் கண்டேன். எனவே, நடுவர்கள் அவருக்கு முதற் பரிசு வழங்கிய செய்தி, எனக்குச் சிறிதும் ஆச்சரியம் தரவில்லை. மாறாக, அதையறிந்ததும் பெருமகிழ்ச்சியே பெற்றேன்.

பத்திரிகைகளில், அவரின் மினிக் கதைகள், சிறுகதைகளைப் படிக்கும் போது, 'இவரின் சிறுகதைத் தொகுதி ஒன்றைப் பிரசுரிக்க வேண்டும்' என்ற எண்ணம் என்னில் பல தடவைகள் தோன்றியதுண்டு அந்த விருப்பம் நிறைவேறும் வாய்ப்பு, இப்பொழுதுதான் கிட்டியிருக்கிறது. கரும்பு தின்னக் கைக்கூலியா கேட்பார்கள் என்பதைப்போல் ஹஸீனாவின் சிறுகதைகளையும் நிரந்தரமாக நிலைக்க வைப்பதற்குக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தத் தயக்கமா வரும்! இலக்கிய சுவைஞர்கள், என்றென்றும் திரும்பத் திரும்பப் படித்து மகிழக் கூடிய படைப்பினை நூலுருவாக்குதல், ஒரு வரப்பிரசாதமாகும்

அவருடைய நடையில், ஒரு சுறுசுறுப்புத் தன்மையுள்ளது ஆனால்,அதிகமான ஆங்கிலச் சொற்கள் இடைக்கிடை வருதல் ஒரு குறையாகச் சிலருக்குத் தோன்றலாம். கதையின் போக்கிற்கு அப்படி எழுதுதல் தேவையேதான். ஆங்கிலச் சொற்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் பேச்சு வாக்கில் வருபவைதான் சாதாரண மாக, எவருக்கும் விளங்கும். கருத்துத் தெரியாதவர்கள், ஆங் கிலம் தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும். அப்படி மற்றவரைக் கலந்து, கதை பற்றியும் உரை யாடி, நூல் பற்றியும் சொல்லாடல் நடக்க வழி செய்வதும் ஒரு உத்தியென்றே கொள்ளலாம். ஆங்கிலச் சொற்களை, இயற் கையாகப் பேச்சில் வரும் விதத்தில் அமைத்திருக்கும் பாணி பாராட்டத்தக்கது. உன்னதமான இந்த அமைப்பு முறையை அவரின் குறுநாவலிலும் காணலாம்.

சிறந்த எழுத்தாளியான ஹஸீனா வஹாப் அவர்களின் பன்னிரண்டு சுவையான மினிக்கதைகளையும், முதன் முதலில் அவர் எழுதியுள்ள குறுநாவலையும் புத்தகமாக பிரசுரிப்பதில், தமிழ் மன்றம் பூரிப்படைகிறது. இந்த வாய்ப்பைத் தந்த சகோதரிக்கு, எமது நன்றி. இலக்கிய ஆர்வலர் இந்நூலை வரவேற்றுப் பாராட்டுவர் என்பதில் எமக்கு நிறைய நம்பிக்கை உண்டு.

எஸ். எம். ஹனீபா
நிறுவனர்

தமிழ் மன்றம்.
இல. 10, நாலாவது லேன்,
கொஸ்வத்த ரோட்,
இராஜகிரிய,
ஸ்ரீ லங்கா.
1992-05-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இந்நூலின் படைப்புகளைப் பற்றிக் கூறுவதற்கு முன், படைப்பாளியைப் பற்றிச் சிறிது கூறுதல் பொருத்தமுடைத்து என நினைக்கின்றேன்.

பத்திரிகைகளிலே வெளிவருகின்ற அல்லது தொகுதிகளாக வெளிவந்த எல்லாக் கதைகளயும் படிக்கும் வழக்கம் என்னிடம் இல்லை.

தேவை கருதி — அல்லது நெருக்கமானவர்கள் எனக் கருதும்போது,

அல்லது பிரபலமானவர்கள் எனக் கருதும் பட்சத்தில், கிடைக்கும் கதைகளை மட்டும் படித்துப் பார்க்கும் வழக்கமுடையவன் நான்.

இந்த விதிகளுக்குள் அடங்காத மாத்தறை ஹஸீனா வஹாப் அவர்களின் இரண்டொரு கதைகளை நான் படித்துப் பார்த்துள்ளேன்.

அப்பொழுதெல்லாம் கதாசிரியை பட்டதாரி ஆசிரியை என்றோ,

உருவகக் கதை ஆசிரியரும் எனது மாணவருமான ஜனாப் எம்.ஐ.எம் முஸம்மில் அவர்களுடைய துணைவியார் என்றோ,

இரண்டு தேசியமட்டச் சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றவர் என்பதுவோ எனக்குத் தெரியாது.

முஸ்லிம் சமூகத்தில் பெண் படைப்பாளிகள் மிக மிக அபூர்வம் என்பதனால் எழுதுவர்களை ஆசீர்வதிக்கும் நோக்கோடு தேடிப் படிக்காவிட்டாலும் கிடைக்கும் போதெல்லாம் படித்துப் பார்ப்பதுண்டு.

இந்த விதிக்குள் அடக்கமானதுவே நான் படித்துப் பார்த்த ஹஸீனா வஹாப் அவர்களின் இரண்டொரு கதைகளுமாகும்.

ஆனால், இவரது கணவர் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுமாறு கேட்டு வந்தபோது தான் மாத்தறை ஹஸீனா வஹாப், முஸம்மில் அவர்களின் துணைவியார் என்பதுவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொகுதி வெளியிடும் அளவிற்கு தேசிய பத்திரிகை களில் எழுதியுள்ளார் என்பதுவும், எனக்குத் தெரியவந்தது.

நிற்க —

இவரது தொகுதியிலே பதின்மூன்று புனைக் கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் புனை கதை வடிவங்களான தேவதைக் கதைகள், நாடோடிக் கதைகள், சிறு கதைகள், நெடுங்கதைகள், குறுங்கதைகள், ஒருபக்கக் கதைகள் என்ப வற்றுள் எந்த வடிவத்தினுள் அடங்கும் எனப் பார்த்தால் பன்னிரெண்டு கதைகள் ஒரு பக்கக் கதை வடிவத்துள்ளும், ஒரு கதை குறுங்கதை வடிவத்துள்ளும் அடங்கும் என எனக்குப் படுகிறது.

ஒரு பக்கக் கதை எனும் புனைக் கதை வடிவம் மிகப் பிரபல்யம் இல்லாத—மிக அண்மை காலத்தில் இனங் காணப் பட்ட ஒரு வடிவம் எனலாம்.

ஒரு பக்கக் கதை என்றதும் கதையின் நீள அகலமே அதாவது கதையின் அளவே எமது மனதில் பட்டென்றுபடும்.

ஆனால் ஒரு பக்கம் என்ற சொல் அளவை மட்டும் குறிக் காது கதையின் ஒரு அம்சத்தை மட்டும் கூறி வந்து கடைசியில் வாசகனைப் பிரமிப்படையவும், எதிர்பர்ராத முடிவினால் அதிர்ச்சியடையவும் செய்து கதையை மூடிவிட்டுச் சற்று நிதானமாக இருந்து கதை பற்றி சற்று யோசிக்கவும் செய்வது ஒரு பக்கக் கதையின் தன்மைகள் எனலாம்.

இதனை வேறு ஒரு வகையாக கூறுவதாயின், ஒரு பக்கக் கதை சிறுகதை போன்று இருந்தாலும் சிறு கதையின் ஒரு பக்கம் மட்டுமே எனவும் கூறலாம்.

இவ்வடிவத்தை சிறுகதை வடிவத்தில் இருந்தும் வேறு ஒரு வடிவமாகக் கொள்வதற்கு வேறொரு காரணமும் உண்டு.

ஒரு பக்கக்கதை சிறுகதை போன்று உருவம், உள்ளடக்கம் இரண்டிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டோ, அல்லது சொற்கள் வசனங்கள் மொழியாழ்கை என்பவற்றிலே அதிக கவனம் செலுத்தப்பட்டோ புனையப்படுவதில்லை.

சிறுகதை ஒரு நாணயம் எனின் அதன் ஒரு பக்கமே ஒரு பக்கக் கதையெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கக்கதை வடிவத்தை இலங்கையிலே உள்ளவர்கள் அதிகம் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை,

ஆனால், தமிழ் நாட்டில் ஆனந்த விகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகள் ஒரு பக்கக் கதையினை விரும்பி பிரசுரிப்பதை நாம் அவதானிக்க முடிகிறது.

மாத்தறை ஹஸீனா வஹாப் அவர்களின் இக்கதைத் தொகுதியிலே இடம்பெற்றுள்ள பதின் மூன்று கதைகளுள் பன்னிரெண்டு கதைகள் ஒரு பக்கக் கதை வடிவத்தைச் சார்ந்தது.

ஏலவே, பல தேசிய பத்திரிகைகளில் பிரசுரமானவை. 'தடுமாற்றம்' என்னும் ஒரேயொரு கதை மட்டும் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படவில்லை.

என்னைப் பொறுத்தவரை ஏலவே பத்திரிகைகளில் பிரசுரமாகிய பதினொரு கதைகளையும்விட 'தடுமாற்றம்' மிக மிக அற்புதமான கதையென்பேன்.

பென்னம் பெரியதொரு தத்துவத்தை மிக அழகாக எளிமையான சம்பவச் சித்தரிப்போடு புனையப்பட்டுள்ளது இக்கதை.

இக்கதையொன்றே ஹஸீனா வஹாப் அவர்கள் நல்ல தொரு படைப்பாளி என்பதற்குச் சான்று பகரும்,

'உபாயங்கள்', 'உறங்கா்த உண்மை', 'நாடகமே உலகம்', 'சந்தேகம் என்பது' போன்ற கதைகள் நல்ல கதைகள் எனலாம்.

'தீர்மானம் தீர்க்கமானதல்ல', 'அறுவடை', 'பரிகாரங்கள்', 'வழி தெரியாதவன்' போன்ற கதைகள் சுமாரான கதைகளே.

'வதங்காத மலரொன்று' எனும் குறுங்கதை அல்லது குறுநாவல் அதீதக் கற்பனை என ஒரு சிலர் எண்ணக்கூடும்.

ஆனால் இக்கதையினை நான் அதீதக் கற்பனை எனக் கூறமாட்டேன்.

காரணம்

எழுத்திற்கு எழுத்து

வசனத்திற்கு வசனம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திக்கு பத்தி, இக்கதை போன்று அப்படியே உண்மையாக நடந்ததை நானறிவேன்,

அப்படியிருக்க எப்படி அதீதக் கற்பனை எனக் கொள்வது

அனுபவச் சுவடுகளே இலக்கியப் படைப்புக்கள் என்றால் ஹஸீனா வஹாப் அவர்களின் **'வதங்காத மலரும்'** பெரியதொரு இலக்கியப் படைப்பே எனலாம்.

மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்
B.A. (Hons.), S.L.E.A.S

சாய்ந்தமருது,
1992 - 04 - 17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

1978-ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் தேசியப் பத்திரிகைகளான தினகரன் வாரமஞ்சரி, சிந்தாமணி, வீர கேசரி வாரவெளியீடு ஆகியவற்றில் குட்டிக்கதை, சின்னஞ் சிறுகதை. மணிக்கதை, குறுங் கதை, எனும் மகுடங்களில் பிரசுரமாகிய எனது 'ஒரு பக்கக் கதை'களில் பதினொன் றினையும், பிரசுரமாகாத ஒரு கதையினையும், 1988-ஆம் ஆண்டு தினகரன் நாளிதழில் 'இதய கோலங்கள்' பகுதியில் தொடர்ந்து பிரசுரமாகிய பதினொரு அத்தியாயங்களைக் கொண்ட 'வதங்காத மலரொன்று' எனும் எனது குறுநாவ லையும் இத்தொகுப்பு அடக்கியுள்ளது.

புத்தகம் போட வேண்டும் என்பதற்காகவோ, ஏதோ எழுத வேண்டும் என்பதற்காகவோ, நான் கதைகள் எழுத வில்லை. நான் கண்டும், கேட்டும் தரிசித்தவற்றில் எனது மனதை தொட்டவற்றுக்கு எழுத்து வடிவம் கொடுத்துள்ளேன்.

ஏராளமான வாசகர்கள் பத்திரிகைகள் படிக்கும்போது விரைவில் படித்து முடித்து விடக்கூடிய 'ஒரு பக்கக் கதை' களையே முதலில் விரும்பி வாசிக்கின்றார்கள் என்பதை மறுக்க முடியாது. அதனைக் கருத்திற் கொண்டும், எனது வசதியை கருதியும் அவற்றுற்கு 'ஒரு பக்கக் கதை'களாக வடிவம் கொடுக்க முனைந்தேன்.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள 'ஒரு பக்கக் கதை'களில் சிலதின் தலைப்புக்களில் செய்துள்ள மாற்றங்களைத் தவிர அனைத்தையுமே பத்திரிகைகளில் வெளிவந்த மாதிரியே இடம்பெறச் செய்துள்ளேன்.

நேரடியாக என்னை அறிமுகமான பல வாசகர்கள் கேட்கும் கேள்வி, 'நீங்கள் ஏன் உங்கள் பெயருடன் கணவரின் பெயரைச் சேர்த்துக் கொள்ளாது இன்னும் மாத்தறை ஹஸினா வஹாப், ஏ. டபிள்யூ. ஹஸினா என்றே பாவிக்கின் றீர்கள்?' என்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது திருமணத்தின் பின்னர் நான் பத்திரிகைக்கு அனுப்பிய ஒரு கதையில் எனது பெயருடன் எனது கணவரின் பெயரையும் சேர்த்து எழுதி அனுப்பினேன். அது பிரசுரமாகியிருந்ததைக் கண்ணுற்ற என் கணவர்; எமது திருமணத்திற்கு முன்பு நான் எப்பெயரில் எழுத்துலகுக்கு அறிமுகமானேனோ, அதேபெயரிலேயே தொடர்ந்து எழுதும்படி என்னை வேண்டிக் கொண்டார். அவரது வேண்டுகோளின் படியே நான் இன்னும் எனது கன்னிப்பெயரில் படைப்புகளை பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறேன்.

என்னுள் மறைந்து கிடந்த எழுத்தார்வத்தை வெளிக்கொணர பூரண ஒத்துழைப்பு வழங்கியவர் எனது கணவரேயாகும். எனது படைப்புகள் பத்திரிகைகளில் தொடர்ந்து பிரசுரமாவதற்கும், நூலுருவில் வெளிவருவதற்கும் அவரது வழிகாட்டுதல்கள், ஆலோசனைகள் பெரிதும் உதவி புரிந்துள்ளன. அவருக்கு நான் என்றும் கடப்பாடுடையவள் என்பதைத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

இத்தொகுப்பினை வாசிக்கும் நீங்கள், உங்கள் அபிப்பிராயங்களை எழுதி நேரடியாக எனக்கு அனுப்பி வைப்பதை பெரிதும் வரவேற்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் !

அன்புடன்

**மாத்தறை ஹஸீனா வஹாப்**

'ஜெஸ்மின் மஹால்'
இல. 122, மரைக்கார் வீதி,
மருதமுனை,
கல்முனை,
ஸ்ரீ லங்கா (இலங்கை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபாயங்கள்

பிரசித்திபெற்ற அந்தப் பெரிய 'ஜுவலரி'யில் ஒரு காற்பவுணில் காதணி ஒன்று வாங்குவதற்காகச் சென்றிருந்த எனக்குப் பக்கத்தில் அமர்ந்து பெரிய 'நெக்லஸ்'களை பார்த்துத் தெரிவு செய்து கொண்டிருந்த இரண்டு இளைஞர்களும் வாங்கப்போகும் நகையோடு நான் வாங்கப் போகும் காற்பவுணில் அமைந்த நகையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எனக்கு சங்கோஜமாயிருந்தது.

''எங்களுக்கு விலையை பற்றி எந்தவித பிரச்சனையும் இல்லை. ஆனா . . . அசல் டுவன்டி டூ கரட்டாக இருக்க வேணும் . . .'' இளைஞர்களில் ஒருவன் சொன்னான்.

''எய்ட்டீன் கரட் என்று சொல்லித் தந்தால் அது எய்ட்டீன் கரட்தான்''

டுவன்ரிடு கரட் என்று சொல்லி தந்தோமென்றால் டுவன்டிடூ கரட்டாத்தான் இருக்கும் ... அதில நீங்க சந்தேகப்படத் தேவையில்லை' 'சேல்ஸ்மேன்' தனது திறமையைக் காட்டிக் கொண்டிருந்தான்.

வாடிக்கையாளர்களைக் கவர்ந்துவிட வேண்டும் என்ற அவர்களது தாகம் காரணமாக அந்த இளைஞர்களுக்கு இரண்டு குளிர்பான தம்ளர்களும், எனக்கும் மகனுக்கும் இரண்டு குளிர்பான தம்ளர்களும் கொண்டு வந்து வைத்தான் கடைச் சிப்பந்திகளில் ஒருத்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு வியாபார உபாயம் !

காற்பவுனில் நகையை வாங்கிவிட்டு நான்கு ரூபா பெறுமதியான குளிர்பானத்தை நானும் மகனும் அருந்த மனம் இடந்தரவில்லை.

'சேல்ஸ்மேன்' ஒருத்தனின் வற்புறுத்தலும், வெயிலின் அகோரமும் எங்கள் குடலுக்குள் அந்த 'கூல்டிரிங்ஸ்'சை திணிக்கச் செய்தன.

குளிர்பானத்தை அருந்தும்போது அந்த இளைஞர்களைக் கடைக் கண்ணால் கவனித்தேன். ருசித்து, ருசித்து பானத்தைப் பருகிக்கொண்டிருந்தார்கள்.

''டிசைன் எனக்கு நல்லாப் புடிச்சிருக்கு! எதுக்கும் வைஃபைக் கூட்டி வாறன். அவக்கும் பிடிச்சால் சரி எடுப்போம் . , . ''

''அதுக்கென்ன . . . மனைவிக்கு 'நெக்லஸ்' புடிச்சா தானே வாங்கவேணும்'' 'சேல்ஸ்மேன்' சொன்னான்.

''கட்டாயம் பிடிக்கும் . . . இதை எடுத்து வையுங்க. பின்னே ரம் கூட்டி வாறன் . . . தப்பினால் நாளைக்கு வருவேன் . . .'' நான் வெளியிறங்கியதோடு இப்படிச் சொல்லிக் கொண்டு, அவர்களும் அந்த நகைக் கடையை விட்டு வெளியேறிவிட்டார்கள்

பஸ்ஸுக்குள் நல்ல சன நெரிசல் . . . 'கொண்டக்டர்' 'டிக்கெட்' எழுதிக்கொண்டு, பின் நோக்கி வந்து கொண்டு இருந்தார். நல்ல புழுக்கம் . . . அதனால் பிரயாணிகளின் கலகலப்பு.

''எப்பிடி மச்சான் என்ர ரிக்ஸ் . . . டவுணுக்கு வந்தால் நான் இப்படித்தான் . . . ஒரு நாளைக்கு ஒரு கடையில் நகை பார்ப்பன். வேறொரு நாளைக்கு வேறொரு ஜுவல்லரியில் பார்ப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறது நகை வாங்குறதுக்கு இல்லடா! எல்லாம் ஒரு கூல்டிரிங்ஸ் குடிக்கத்தான். கடைசியில வைஃபுக்கு பிடிக்க வேணும்... கூட்டி வாறன் என்டுட்டு கழண்டுடறதுதான்..''

''நல்ல புத்திதான் மச்சான் உன்ட 'ஐடியா' நகைக் கடைக் காரண்ட 'ஐடியா'வை வெண்டுட்டுதடா...''

பின் ஆசனத்தில் உரையாடிக் கொண்டிருந்த இளைஞர் களைத் திரும்பிப் பார்த்தேன். சற்று முன்னர் அந்த 'ஜுவல்லரி'யில் என்னோடு அமர்ந்து 'நெக்லஸ்' பார்த்து விட்டு குளிர்பானம் அருந்திவிட்டு வெளியேறிய அதே இளைஞர்கள்தான்.

o—o—o—o

(சிந்தாமணி — 1990-01-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானம் தீர்க்கமானதல்ல

''என்ன சார் . . . இந்த அலீம் மாஸ்டர் எல்லா இடங்களிலயும் உங்களப் பற்றியே மோசமாகக் கதைச்சுத் திரியுறார் நீங்க ஒரு பிரின்சிபல் என்ற மரியாதை இல்லாமல் பேசித் திரியுறார் . . .

அவரை எங்கட ஸ்டாப் எண்டு சொல்லவே வெட்கமாயிருக்கு. அவரை இந்த ஸ்கூலில் இருந்து வேற ஸ்கூல் ஒண்டுட்கு மாத்தி போடுங்க சார்...''

இன்னொரு ஆசிரியரின் இந்த முறைப்பாடோடு ஏறக்குறைய அந்தப் பாடசாலையின் ஆசிரியர்களில் நூற்றுக்கு என்பது வீதமானோர் அலீம் ஆசிரியரைப் பற்றி அதிபரிடம் முறையிட்டுவிட்டனர்.

என்னோடு அலீம் மாஸ்டர் நல்லாகத்தானே இருந்தார். ஓஹோ . . . இருந்தாலும் இப்போ அவர் என்னைப் பற்றி கதைச்சுத் திரியுறதைப் பார்த்தா, இவர்தான் என்னைப் பற்றி மொட்டைக் கடிதம் எழுதிவித்திருப்பாரோ . . . ?

தனக்குள் இப்படித் தீர்மானித்துக் கொண்ட பாடசாலை அதிபர் சற்று யோசித்தார்.

அவர் அந்த பாடசாலையில் அதிபராக நியமிக்கப்பட்டு, சுமார் பத்து வருடங்களாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்களினதும், உயர்தர வகுப்புப் படிக்கத் தகுதிபெறும் மாணவர்களினதும் அதிகரித்த எண்ணிக்கையே அவரது நிர் வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஆனால், அந்தப் பாடசாலையில் நடைபெற்ற ஒரு விழா வில் நிகழ்ந்த சில ஊழல்களை சுட்டிக்காட்டி, ஊர் பிரமுகர் களுக்கும், அதிபருக்கும் மொட்டைக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

தனது சூழ்ச்சி பலிக்காததால்தான், இதெல்லாம் நடந்த ஒரு மாதத்துக்குப் பிறகு என்னைப் பற்றி இப்பிடியெல்லாம் அலீம் மாஸ்டர் கூடாமல் கதைத்துத் திரியுறார். அவரை இந்த ஸ்கூலை விட்டு 'டிரான்ஸ்ஃபர்' பண்ணத்தான் வேணும் இப்படி முடிவு செய்த அதிபர் இயங்கத் தொடங்கினார்.

அன்று வந்த கடிதங்களில் ஒன்றை உடைத்துப் பார்த்த அதிபரின் முகத்தில் வெற்றிக்களை பளிச்சிட்டது. குற்ற வாளியை தண்டித்துவிட்ட வெற்றிக்களிப்பு.

பேசையில் இருந்த அழைப்பு மணியை மூன்று தடவை கள் தனது வலக்கை விரல்களால் வேகமாகத் தட்ட, அவரது அருகில் வந்து நின்றான் 'பியோன்'

'' போய் அலீம் மாஸ்டரை வரச் சொல் . . . ''

அமைதியாகவும் அடக்கமாகவும் அதிபரின் எதிரே வந்து நின்ற அலீம் ஆசிரியரின் முகத்தில் கேள்விக் குறி படர்ந்திருந்தது.

'' மாஸ்டர்! உங்களைப் பற்றி எனக்கு தினமும் மற்ற 'ஸ்டாஃப்ஸ்' சிடமிருந்து 'கொம்ப்ளயின்ற்ஸ்' ; என்னைப் பற்றி 'கென்ரீன்'யிலும், 'ஸ்டாஃப் ரூம்'யிலும் நீங்கள் கூடா மல் கதைத்துத் திரியுறதாக முறைபாடுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை விரும்பாத நீங்க இங்க படிப்பிக்கிறத நானும் கூட விரும்பல்ல . . . சோ . . . யூ ஆர் ட்ரான்ஸ்ஃபர்ட் ரு எனதர் ஸ்கூல் . . . '

இப்படி பேசியவாறு, அலீம் ஆசிரியரின் இடமாற்ற கடிதத்தை அவரிடமே நீட்டினார் அதிபர்.

சிரித்த முகத்துடன் அலீம் ஆசிரியர் பேசத் தொடங்கினார். '' நீங்க ஒரு திறமையான அதிபர். உங்கள் திறமையால தான் இங்கேயுள்ள மற்ற ஆசிரியர்கள் படிப்பிக்கிறாங்க. உங்களால சில தவறுகள் நேர்ந்திருக்கலாம். அதற்காக இந்த ஸ்கூலை விட்டு உங்களை இடம்மாற்றுற நோக்கத்தோட மொட்டைக் கடிதம் எழுதறது நல்லதல்ல.

அது மட்டுமில்ல . . வரும் புதிய அதிபர் உங்களைவிட கூடுதலான தவறுகள் செய்பவராக இருக்கலாம்.

அத்தோடு உங்களிடமுள்ள படிப்பிக்குமாறு ஆசிரியர் களைத் தூண்டும் திறமை இன்னொரு அதிபரிடம் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் ?

அதனாலதான் உங்களுக்கு எதிராக மொட்டைக் கடிதம் எழுதி, சுவரொட்டி ஒட்டுவித்து இயங்குகின்ற ஆசிரியர்களை அறிய வேண்டும். என்ற நோக்கத்தோடதான் 'கென்ரீன்' இலும், 'ஸ்டாஃப் ரூம்' இலும் உங்களை வெறுத்த மாதிரி உங்களுக்கு எதிரான மாதிரி கதைத்து திரிந்தன்.

அதைக் கொண்டு நானும் உங்களது உண்மையான எதிரி தான் என்று நினைத்து என்னிடம் அந்த ஆசிரியர்கள் தங்களை இனங்காட்டிக் கொண்டனர்.

சார் . . . மாணவர்களின் நன்மை கருதி நீங்க இந்த பாடசாலையில்தான் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அந்த ஆசிரியர்களை உங்களுக்கு எப்படிச் சொல்லுறது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நினைத்திருந்தேன் . . . ஆனா . . . அதுக்கு முதல் எனக்கு இடமாற்றம் வந்திற்று; சந்தோஷமாக போகிறேன் .'

இடமாற்ற கடிதத்தை தனது 'சேட்' 'பொக்கெட்'டுக்குள் வைத்தவாறு அதிபரின் அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார் அலீம் ஆசிரியர்.

ஒரு திறமையான பொலீஸ் உளவாளியை இழந்துவிட்ட பொலீஸ் கமிஷனர்மாதிரி யோசனையோடு அமர்ந்திருந்தார் அதிபர்.

அவரது வலது கைவிரல்கள் உச்சந்தலையைச் சொறிந்து கெண்டிருந்தன.

o—o—o—o

(சிந்தாமணி — 1989-11-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்காத உண்மை

இரவு உணவை சாப்பிட்டுவிட்டு 'டைனிங் டேபிளில்' இருந்தவாறே எமது வாக்குவாதம் தொடங்கிற்று.

''தம்பி, அத்தான் அப்படி ஒருபோதும் நடக்கமாட்டார். அவர் யூனிவசிட்டியில ஒரு சீனியர் லெக்சரர். அதுவும் அவருடைய ஃபீல்ட் எக்றிகல்சர். விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சிக்கும், பரிசோதனைகளுக்கும் ஸ்டூடன்ஸ், லெக்சரர்கூட எத்தனையோ இடங்களுக்குப் போகவும், தங்கியிருந்து றிசர்ச் வேலைகளில் ஈடுபடவும் வேண்டியது அவர்ட டியூட்டி. அதை வச்சி......யாரும் கூறும் கட்டுக் கதைகளைக் கேட்டுக்கிட்டு எனக்கிட்ட பேச வராதேடா''

''இல்லை அக்கா...எனது நெருங்கின ஃபிறண்ட் ஒருவன் தான் சொன்னான். அவனும் அவருட ஸ்டுடன்தான்...''

''தம்பி...உனக்கு அவரோட உள்ள கோபத்தை வச்சி அவருக்கு கரிபூச முயலாதே. அவர் மீது இப்படியான ஒரு கெட்ட அபிப்பிராயத்தையும், கோபத்தையும் உனது மனசிலே வைச்சுக்கொண்டு அவரோடு பேசுவதற்கு உனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசு வருகுதா?...'' எனது கணவனைப் பற்றி உண்மைக்கு மாறாக எனது தம்பி பேசியதால் அவனைக் கோபித்துப் பேசவேண்டியது எனது கடமையாயிற்று

''அப்படியெண்டால் இந்த வீட்டை விட்டும் என்னை வெளியேறவா சொல்கின்றாய்?...''

''எனது கணவன் கெட்டவன் என்றால், அவன் கட்டிய வீடு எப்படி உனக்கு நல்லதாகலாம்?''

மிகவும் மனச்சுமையோடு தான் தங்கியிருந்த மாடிக்கு படிகளில் சிரமப்பட்டு எனது தம்பி ஏறிக்கொண்டிருந்தான். தம்பிக்கு மனம் நோகப் பேசிவிட்டோமே என்ற மனச்சுமை என்னை வேதனைப்படுத்தியது. அதனைப் போக்க ஒரே வழி என் கணவனுடனாவது டெலிபோனில் பேசுவது தான் என்று எனக்குத் தோன்றியது.

நேரம் இரவு ஒன்பது மணி. எனது கணவன் வழக்க மாக இப்படியான 'ஃபீல்ட் றிசர்ச்'சுகளுக்குப் போகும் போது அவர் தங்கும் ஹோட்டல்களின் டெலிபோன் இலக்கங்களைத் தந்துவிட்டுப் போவது வழக்கம். அவசர செய்திகளுக்காக அவருடன் தொடர்பு கொள்ளவே இந்த ஏற்பாடு, எனது விரல்கள் டெலிபோன் இலக்கங்களைச் சுழற்றின.

எனது கணவரின் பெயரைச்சொல்லி, அவரோடு பேச வேண்டும் என்றேன்.

அந்த ஹோட்டலின் பத்தாம் நம்பர் ரூமில் அவர் தன் மனைவியோடு தங்கியிருப்பதாகவும், ஆனால் அவர் தற்போது வெளியே போயிருப்பதாகவும், அவரது மனைவி மாத்திரம் அந்தப் பத்தாம் இலக்க அறையிலேயே தற்போது இருப்பதாகவும், அவசர செய்தியாயின் அவரது மனைவி யோடு பேசமுடியும் என்றும், அவரது மனைவியாகிய எனக்குப் பதில் கிடைத்தது.

'அக்கா! அத்தான் அவரோடு வேலை பார்க்கிற ஒரு லெக்சரர் பொண்ணோட தொடர்பாம். அவள் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணம் முடியாத தனிக்கட்டையாம். நடத்தையும் சரியில்லையாம். போகிற போகிற இடங்களில், ரெண்டு பேரும் ஹஸ்பண்ட் அன் வைஃப் மாதிரி நடந்து கொள்ளுகிறத மற்ற ஸ்டூடன்சுகளால பார்த்து சகிக்க முடியாதாம்...!

சற்று முன்பு 'டைனிங் டேபிளில்' இருந்தவாறே கூறிய எனது தம்பியின் இந்தக் கூற்று உண்மை, என்பதை உணர்ந்துகொண்ட எனக்குத் தலையைச் சுற்றியது. அந்த வேதனையைப் போக்க எனது தம்பி தங்கியிருந்த மாடிக்கு படிகளில் அவசர அவசரமாக ஏறினேன்.

சிறு வயதிலே பெற்றோரை இழந்த எனக்கு உறுதுணை யாக இருந்த எனது தம்பி அவனது உடைமைகளோடு வெளி யேறியிருந்தான். நான் தனிமையாக்கப்பட்டுவிட்ட உணர்வு என்னை ஆட்கொண்டது. ★

(தினகரன்—1989-11-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகமே உலகம்

'லைப்ரெரி அசிஸ்டெண்ட்' ஆகக் கடமை பார்த்த அவள் இப்படியொரு 'றீடரை' - அதாவது ஒரு வாசகனை தனது 'சர்வீஸ் பீரியட்'டிலே இதுவரை பார்த்ததேயில்லை.

வாட்டசாட்டமான அந்த இளைஞன் 'லைப்ரரி'க்கு நாள் தவறாமல் வந்து அங்கு கிடக்கும் சகல பத்திரிகை களையும் பார்த்துத் தள்ளுவான். அவள் அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவன் அங்கு கிடந்த பத்திரிகை களிலும் சஞ்சிகைகளிலுமே முகம் புதைத்தவனாகக் காணப் பட்டான்.

அவனது வாசிப்புத் திறமையைக் கண்டு வியந்த அவள் கால ஓட்டத்தில் அந்த வாசகனிடம் தன் மனதைப் பறி கொடுத்தாள். இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கத் தொடங்கினர்.

கண்ட நிண்டவர்க்கெல்லாம் 'லவ் லெட்டர்' எழுதித் தொலைக்கும் இந்தக் காலத்தில் அவன் அவளுக்கு ஒரு கடிதமாவது எழுதாமை அவன் மீது அவள் கொண்டிருந்த நம்பிக்கையையும் கௌரவத்தையும் மேலும் அதிகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்தனான அவன், அவளின் பெற்றோரிடம் எந்தவித வரதட்சணையும் கோராததால் அவர்களது திருமணம் நிச்சயிக்கப்பட்டாயிற்று.

அதைத் தொடர்ந்து அவர்களது திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

அவளது தோழிகள் எல்லாரும் அவளை வாழ்த்திச் சென்றனர். அவர்களது நண்பர்களிடமிருந்து பல பரிசுப் பொருட்களும் வாழ்த்து மடல்களும் வந்து குவிந்தன.

எல்லாவற்றையும் விட நல்ல ஒரு வாசகனை - அதாவது ஒரு 'றீடரை' தனது கணவனாக அடைந்துவிட்டதில் 'லைப்ரரி அசிஸ்டெண்ட்' ஆகக் கடமை பார்க்கும் அவளுக்கு ஒரு பரம திருப்தி.

''எல்லா வாழ்த்துக்களையும் நான்தானே வாசித்தேன், எஞ்சியுள்ள ஒன்றை மட்டும் நீங்களே வாசியுங்களேன்'' வந்திருந்த வாழ்த்துரைகளைத் தான் உரத்து வாசிக்க; கேட்டுக்கொண்டிருந்த தன் கணவனை அவள் வேண்டிக்கொண்டாள்.

''நான் ஒரு செல்வந்தன்தான். ஆனா... நான் இளமையில வறுமையில தான் வளர்ந்தேன். அதனால நான் படிக்கவேயில்லை... எனக்கு வாசிக்கத் தெரியாதே...'' என்று கூறி பரிதாபமாக பல்லை இளித்தான், அவளது கணவனாகிவிட்ட அவன் - நல்லதொரு வாசகன் என்ற அவளது தீர்மானத்துக்கு ஆளாகிய அவன்.

''அப்படியென்றால் நீங்கள் தினமும் லைப்ரரிக்கு வந்து வாசித்துத் தள்ளியது...?''

''எல்லா நாடகமும் உங்களை அடைவதற்காகத் தான்...'' அவனது பதில் அவளை ஆச்சரியத்துக்கும், ஏமாற்றத்துக்கும் உள்ளாக்கியது. ★

(சிந்தாமணி — 1989-09-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

எதிர்வீட்டு நிரோசாவைக் காணும்போதெல்லாம் மிஸ்ரியாவின் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது.

நிரோசா நஸீரை விரும்பியிருந்தபோது எல்லோரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையும், பின்னர் அவர்கள் இருவரும் வீட்டை விட்டு ஓடி நண்பர்களின் ஆதரவோடு திருமணம் செய்துகொண்டதையும்,

பொலீஸ் படையில் கடமைபார்த்துக் கொண்டிருந்த நஸீர் தனது திணைக்களத்தின் கட்டுப்பாடுகளை மீறி அனுமதி பெறாமல் திருமணம் செய்துகொண்டதற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டதனால் குடும்ப வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்த புதிதியிலேயே அத்தம்பதி பட்ட கஷ்டங்களையும், துயரங்களையும் அறிந்திருந்த மிஸ்ரியா அவர்கள் இப்போதிருக்கும் செல்வ நிலையைக் காணும் போது பொறாமைப்படாமல் இருக்க அவளால் மட்டுமல்ல எந்தப் பெண்ணால்தான் முடியும்.

வேலையை இழந்த நஸீர் 'செக்யூரிடி காட்' ஆக வேலைக்குச் சேர்ந்த 'கார் சேல்ஸ்' கொம்பனி மூலம்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தைக் கொண்டு இன்று ஒரு 'கார் சேல்ஸ்'ஸை நடாத்தும் ஒரு பெரிய மோட்டார் வாகன வியாபாரி.

''இங்கே...மிஸ்ரியா! எல்லாம் இறைவனின் நாட்டம்தான். நம்மளைவிட கஷ்டத்தில இருந்த குடும்பந்தான் அது.

இப்போ எப்பிடியோ இறைவன் அவர்களுக்கு முகம் பார்த்திருக்கிறான். அதைப் பார்த்துப் பொறாமைப் படாதே. நமக்கு நல்ல வாழ்க்கையைத் தரச் சொல்லி இறைவனிடமே கேளு. பொறாமைபடுறது நாமளே நமக்குத் தேடிக்கொள்ளுற கேடுதான்...''

நிரோசா இன்று சொந்தமான மாடி வீட்டில். சகல வசதிகளுடனும் வாழ்வதைப் பார்த்து பொறாமைப்படும் மிஸ்ரியாவின் கணவனான அரச ஊழியன் மஜீதுதான் தன் மனைவிக்கு புத்திமதி சொன்னான்.

கணவன் மஜீத் கடமைக்குச் சென்று திரும்பும்வரை வீட்டில் தனிமையில் கழித்த மிஸ்ரியாவால் பொறுமையைக் கைக்கொள்ள முடியாமல் தடுத்தது பொறாமை.

அவளது திட்டத்தை செயற்படுத்த முடிவு செய்தாள்.

எட்டரம் வகுப்புப் படிக்கும் தன் மகனோடு தினமும் பாடசாலை விட்டு அந்த வழியே வரும் வெஸ்பி என்ற பையனை அழைத்து அன்பாய் அவனை ஆதரித்தாள்.

தன் மகனோடு அவனையும் இருத்தி பகல் உணவு கொடுத்து ஆதரித்தாள்.

சிறுவன் வெஸ்பி, மிஸ்ரியாவின் வேண்டுகோளை செவ்வனே நிறைவேற்றி விடைபெற்றான்.

கடமையிலிருந்து களைத்து வீடு திரும்பிய மஜீத் தன் தலைவலியைப் போக்க தலைவலி மாத்திரை தேடி மேசை லாச்சியைத் துளாவினான்.

ஒரு கடிதம்... வாசித்தான்.

''அன்புக்கும், பரிதாபத்திற்குமுரிய சகோதர,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னோடு கொண்ட பற்றுதல் காரணமாகவே இக்கடிதத்தை எழுதுகிறோம். உனது மனைவி நீ தொழிலுக்குப் போனதன் பின்பு வீட்டில் ஒரு அந்நியனை வைத்துக் கொண்டு ஆடும் ஆட்டம்.

அப்பப்பா... எழுத்தில் எம்மால் வடிக்க முடியாது. அவன் உனது மனைவியிடம் வருவதையும் போவதையும் நாம் அவதானித்த பின்னர்தான் இதை எழுதுகிறோம்

ஏதோ ஒருநாள் உனது மனைவியின் ஆட்டம் கையும் மெய்யுமாக உனக்குப் பிடிபடும் எதற்கும் எச்சரிக்கையாய் இருந்து கொள்.

இப்படிக்கு,
உன்மேல் பரிவுள்ள நண்பர்கள்.

''அடியேய்... எவ்வளவு காலமா இந்த ஆட்டம் ஆடுகிறாய்?...'' மஜீதின் குரல் உரத்த தொனியை உரிமையாக்கிக் கொண்டது.

''சத்தியமாய் சொல்லுறேன். அது... அது வந்து... நான்தான் எழுதுவிச்சன்... நிரோசாவின் புருஷனுக்கு அனுப்புறதுக்கு வெஸ்பி என்ற பொடியனைக் கொண்டு எழுதுவித்த மொட்டைக் கடிதந்தான் அது...'' மிஸ்ரியா தடுமாறினாள்.

''எனக்கு வந்த கடிதத்தை உடைச்சுப் பார்த்திட்டு... உறையைக் கிழிச்சு எறிந்துவிட்டு கடிதத்தைக் கிழிச்சு எறிய மறந்துட்டாய்... இப்ப கதைய மாத்துறாய்... எவ்வளவு நாளா இந்த ஆட்டம்டி?... யாருடி உன் கள்ளப் புருஷன்...'' மஜீத் விசர் பிடித்தவன்போல கத்தினான் மிஸ்ரியாவைப் பார்த்து.

அதே நேரம் நிரோசாவும், அவளது கணவன் நசீரும் ஒரு விருந்துக்கு காரிலே கிளம்பிக் கொண்டிருந்தார்கள்; ★

(சிந்தாமணி — 1988-11-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிகாரங்கள்

நான் கண்டிக்கு வந்த அலுவல்கள், மறுநாள் தான் முற்றுப் பெறும் என்பதால் அன்றைய பொழுதை எப்படிக் கழிப்பது என யோசித்தேன்.

என்னோடு ஆயுர்வேதக் கல்லூரியில் வைத்தியப் படிப்புப் படித்து தற்போது வெளியேறி, தனிப்பட்ட முறையில் தொழில்பார்க்கும் எனது நண்பி தனது பிரத்தியேக வைத்தியசாலை முகவரியை ஒரு முறை நாங்கள் கொழும்பில் சந்தித்துக்கொண்டபோது தந்து, கண்டிக்கு வந்தால் தன்னைச் சந்திக்கும்படி கூறியது நினைவுக்கு வந்தது.

கைப் பையைத் துழாவிப் பார்த்தேன். அம்முகவரி அட்டை இருந்தது. கணவரிடம் விடயத்தைக் கூறினேன்!

போவதாகத் தீர்மானித்தோம்.

ஒருவாறாக கண்டியிலிருந்து சில மைல் தொலைவில் அமைந்திருந்த அந்தக் கிராமப் புறத்துக்குச் சென்றோம்.

முகவரி அட்டையில் இருந்த பிரத்தியேக வைத்திய சாலை திறந்திருந்தது. நோயாளிகள் மருந்து வாங்கக் குழுமியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து வாங்கச் செல்பவர்கள் போல நாமும் திடீரெனச் சென்று நண்பியை வியப்பில் ஆழ்த்த வேண்டும் என நினைத்துக் கணவர், நான், மகன்மார் யாவரும் மருந்து வாங்க வருபவர்கள் காத்திருக்கும் அறையில் தரித்திருந்தோம்.

நோயாளிகள் டாக்டரின் அறைக்குள் சென்று, தங்களைக் காண்பித்து மருந்துத் துண்டு எழுதிக்கொண்டு வந்து கொண்டிருந்தனர்.

மருந்து கொடுப்பவன் எல்லோருக்கும் 'ஆஸ்பிரின்', 'பிரிட்டோன்' குளிசைகளையும், சாதாரணமாகக் கொடுக்கும் தண்ணி மருந்தையுமே கொடுத்துக் கொண்டிருந்தான்.

''எனது நண்பி படிக்கும்போதே திறமைசாலியாயிருந்தாளே. அவள் இப்படிச் செய்யமாட்டாளே?'' என்று எனது மனம் சந்தேகம் கொண்டது.

போதாக் குறைக்கு, டாக்டரின் அறையில் ஒரு ஆண் குரலே ஒலித்தது.

சந்தேகத்தைப் போக்க மருந்து கலக்குபவனிடம் விசாரித்தேன். எனது நண்பி அன்று சுகவீனம் காரணமாக வரவில்லையென்றும், வேறு ஒரு டாக்டரைத் தனக்குப் பரிகாரமாக அனுப்பியுள்ளதாகவும் கூறினான்.

அந்த டாக்டரிடம் விசாரித்தால், எனது நண்பி பற்றி அறிந்து கொள்ளலாம் என்றும் சொன்னான்.

நேராக டாக்டரின் அறைக்குள் நுழைந்தேன். அங்கே எனது நண்பியின் தம்பிதான் 'டாக்டர்' வேடத்தில் அமர்ந்திருந்தார்.

என்னைக் கண்டதும் தடுமாற்றத்துடன் கதிரையை விட்டு எழும்பியேவிட்டார். அவரது முகத்தில் வெட்கம் கவிந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிஸ்டர்.... இன்று எனது சிஸ்டருக்கு சுகமில்லை. டிஸ்பென்சரியைத் திறக்காவிட்டாலும் வழக்கமாக வரும் நோயாளிகள் வேறு இடங்களைப் பிடித்துக் கொள்வார்கள் என்ற பயத்தில்தான் என்னை அவ அனுப்பி வைத்தா.

வருபவர்களுக்கு ஆஸ்பிரின், பிரிட்டோன் குளிசைகளையும், தண்ணீர் மருந்தையும் கொடுக்கும்படி சொல்லித் தந்தா...இந்த விஷயம் வேறு யாருக்கும் தெரியாமல் இருக்கட்டும். ப்ளீஸ்...'' என்று மன்றாடினார் டாக்டர் வேடத்திலிருந்த அவளது தம்பி.

எனது நண்பியும், நானும் வைத்தியக் கல்லூரியில் ஒன்றாக இருக்கும்போது, அடிக்கடி வரும் அவளின் தம்பி. வியாபாரத்துக்காக இப்படி டாக்டர் வேடம் போட்டதை நினைத்தபோது 'பணத்துக்காக இப்படியும் ஒரு பரிகாரம் அவசியமா ?' என்று எனது நண்பியைக் கேட்கவேண்டும் போல் தோன்றியது எனக்கு !

(சிந்தாமணி—1987-06-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம் என்பது...

நகர்ப் புறமாய் அமைந்திருந்த அந்த வீட்டிற்கு நாங்கள் குடியேறி ஒரு வாரம்தான் கழிந்திருந்தது. அந்த வீட்டை ஒட்டினாற்போல இன்னொரு வீடு.

அந்த ஒரு வாரத்திற்குள், நாள் தவறாமல், ஒரு நாளைக்குப் பல தடவைகள் பக்கத்து வீட்டுப் பெண் எங்கள் வீட்டுக்கு வந்து என் கணவரிடம் ''நேரம் என்ன?'' என்று கேட்டுத் தெரிந்துகொண்டு செல்வது எனக்கு அவள் மீது சந்தேகத்தையுண்டுபண்ணிற்று.

இளம் பெண். அதுவும் வீட்டிலே இரண்டு மூன்று சுவர்க் கடிகாரங்கள் நல்ல நிலையிலே இயங்கியவாறு தொங்கவிடப் பட்டிருக்கின்றன. அடிக்கடி 'மணி எத்தனை?' என்று கேட்டு வருவது எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தாமலா போகும்: அப்படி மணி எத்தனை என்று கேட்டு வருவதும், எனது கணவர் சிரித்துக் கதைத்து நேரம் சொல்லுவதும் யாருக்குமே சந்தேகத்தை உண்டு பண்ணத்தானே செய்யும்.

அன்றும், வழக்கம் போல நேரம் கேட்டு அவள் வந்தாள். நானும் திட்டமிட்டபடி ''எங்கட மணிக்கூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதாப் போயிட்டு'' என்று எனது கணவருக்கு முந்திக் கொண்டு அவருக்குப் பதில் கொடுத்து, அவளை அப்படியே அனுப்பிவிட்டேன்.

வழக்கமாக ஒரு நாளைக்குப் பல தடவைகள் நேரம் கேட்டு வரும் அவள் அன்று வரவேயில்லை. 'என் கணவருடன் கதைப்பதற்காகத்தான் அடிக்கடி நேரம் கேட்டு வருகிறாள். அவளை இப்படித்தான் அடக்க வேண்டும்' என்று நினைத்து அவளை அடக்கிவிட்ட சந்தோஷத்தில் நான் இருந்தபோது...

மீண்டும் அப்பெண் வந்து, என் கணவரின் சின்னத் தம்பியை அழைத்துச் சென்றாள். அப்படிச் சென்ற அவன் ஒரு நிமிடத்திலேயே திரும்பி வந்துவிட்டான்.

அவனிடம் அப்பெண் எதற்காக அழைத்துச் சென்றாள் என்று வினவியபோது, அவன் தந்த மறுமொழியால் நான் எனது வீண் சந்தேகத்தை உணர்ந்து மன வேதனையடைவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

அவனை அழைத்துச் சென்று தன் வீட்டில் உள்ள சுவர்க் கடிகாரத்தில் நேரம் என்ன என்று பார்த்துச் சொல்லும்படி கேட்ட அப்பெண்ணுக்கு மணி பார்க்கத் தெரியாது என்பதையும், அவள் மேல்]நான் கொண்ட சந்தேகத்தையும் அறிந்து, நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டேன். ★

(தினகரன் வாரமஞ்சரி—1980-08-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைகள்

அம்பாறையிலிருந்து மாத்தறை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த அந்த பஸ் வண்டியில் பயணிகள் நிரம்பியிருந்தனர். அவர்களில் அநேகமானோர் தத்தம் வாய்களை 'ஆ'வெனத் திறந்துவிட்ட கொட்டாவி அவர்களது பசியை பஸ் வண்டியின் சாரதிக்கு உணர்த்தியதோ என்னவோ, நடு வழியில் இருந்த ஒரு 'ஹோட்டல்' ஓரமாக பஸ் வண்டியைச் சாரதி நிறுத்தினார்.

நீண்ட காலமாகச் சந்தியாதிருந்த ஒரு உறவினரைக் காண்பதற்கென ஆர்வத்துடன் செல்வதைப் போன்று, பஸ் பிரயாணிகளும் மிக்க ஆர்வத்துடன் அந்த தேநீர்க் கடைக்குள் முண்டியடித்துக் கொண்டு நுழைந்தனர்.

நானும் ஒருவாறாக அந்த ஹோட்டலினுள்ளே நுழைந்து எனது கணவருடன் ஒரு மேசையின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

எல்லோரும் தத்தமக்குத் தேவையான உணவுகளை எடுத்து உண்டு கொண்டிருந்தனர். இருபத்தைந்து வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கத்தக்க ஒரு இளைஞனும் அவர்களில் ஒருவன், தொதல், மஸ்கட் என்று விலைகூடிய உணவுப் பதார்த்தங் களை நிறைய எடுத்து மூக்குமுட்டச் சாப்பிட்டுக் கொண் டிருந்தது எல்லோரையுமே அவன்பால் கவனிக்கச் செய்தது.

சாப்பிட்டு முடிந்தவர்கள் ஒவ்வொருவராகத் தத்தம் கணக்குகளைப் பார்த்துக் காசு கொடுத்துவிட்டு வெளி யேறிக் கொண்டிருந்தனர். நானும் எனது கணவரும் காசைக் கொடுத்துவிட்டு வந்து, பஸ்ஸில் எங்கள் ஆசனத் தில் உட்கார்ந்து கொண்டோம்.

பஸ் புறப்படுவதற்கு சாரதி வந்து சேரவில்லை. ஆனால், பஸ்ஸுக்குப் பின்புறமாக ஒரு சனக்கூட்டம்!

ஒருவனை அந்தக் கடை ஊழியர்கள் நையப் புடைத்துக் கொண்டிருந்தார்கள், அவன் வேறு யாருமல்ல - சற்று முன்னர் கடையினுள் தொதலும், மஸ்கட்டும் மூக்குமுட்ட சாப்பிட்ட அந்த ஆசாமியேதான்.

கடையில் கணக்கை கொடுக்காது கணக்கு விட்டு விட்டு வந்த அந்த ஆசாமிக்குத்தான் அத்தனை அடியும், உதையும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பது அங்கு நடைபெற்ற உரையாடலில் இருந்து தெரிய வந்தது.

''எங்களிடம் காசு கேட்டிருந்தா கொடுத்திருப்போம் தானே. இப்படியெல்லாம் அடிபட வேண்டுமா?''

''பாவம்... பசி காரணமாகத்தான் காசு கையிலில் லாமல் சாப்பிட்டுவிட்டு காசு கொடுக்காமல் வந்திருக் கிறான்''

இப்படியெல்லாம் பலரதும் பேச்சுக்கள் அங்கு நிறைந்து, அடிபட்ட அவனுக்கு ஆறுதலைக் கொடுத்துக் கொண் டிருந்தன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பசியைப் போக்க தொதலும், மஸ்கட்டுமா சாப்பிட வேண்டும்? ஆசைதான் காரணம்'' இது இன்னொருவரின் குரல்.

ஆசையினால் அந்த இனிப்புப் பதார்த்தங்களைச் சாப்பிட்டுவிட்டு, பண ஆசையினால் அவ்வளவு பணம் கையிலிருந்தும் கொடுக்காது 'டிமிக்கி' விடப்போன அந்த நபர் மாத்திரம் எதுவுமே பேசாது அமைதியாக இருந்தார்.

பஸ் வண்டி புறப்பட்டது.

(வீரகேசரி வாரவெளியீடு — 1979-04-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி தெரியாதவன்

காலை எட்டு மணியை எட்டிக்கொண்டிருந்ததால், நகரில் சன நடமாட்டம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

பாடசாலைக்குச் செல்பவர்களும், அலுவலகங்களில் பணி புரிபவர்களும், நகரில் அமைந்திருந்த் அலுவலகங்களுக்கு அலுவல்களை முடிக்கச் செல்பவர்களும் ஒவ்வொரு பக்கமாக அவசர அவசரமாகச் சென்று கொண்டிருக்கின்றனர்.

நானும் பஸ்ஸில் இருந்து இறங்கி, நான் கடமையாற்றும் பாடசாலையை நோக்கி 'விறுவிறு' என நடந்துகொண்டிருக்கையில், என் கவனத்தை அந்தச் சனக்கூட்டம் ஈர்க்கின்றது.

ஒவ்வொருவரும் தத்தம் பணப் பைகளைத் திறந்து இருபத்தைந்து, ஐம்பது சத நாணயங்களை அந்த மனிதனுக்குப் பக்கத்தில் வீசிவிட்டுச் செல்கின்றார்கள்.

அவனது சவரம் செய்யப்படாத முகம் சோர்ந்து போய்க் காணப்படுகின்றது. அவனது வாய் பேசவில்லை. கண்கள் மாலை மாலையாக நீரைச் சொரிந்து கொண்டிருக்கின்றன.

அவனுக்குப் பக்கத்திலே இரண்டு பிள்ளைகள். ஒன்று அவனது மடியில் உட்கார்ந்து அவனது மோவாயைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கிப் பிடித்து வீரிட்டு அழுதுகொண்டிருக்கின்றது. மற்றப் பிள்ளை,' நிலத்திலே புரண்டு அழுதுகொண்டிருக்கிறது. அவனுக்கு முன்னால் ஒரு பயணப் பெட்டி உருக்குலைந்த நிலையில் அவனைப் போலவே காணப்படுகிறது.

'எங்கோ பயணம் செய்யவந்த அவனின் பணம் யாராலோ கொள்ளையடிக்கப்பட்டிருக்க வேண்டும். போதாக் குறைக்குத் தாயை இழந்த குழந்தைகளும்கூட ..' இப்படி நினைத்துத்தான் எல்லோரும் தங்களால் முடியுமான உதவிகளை அளித்துவிட்டுச் செல்கின்றார்கள் என்பது தெளிவாகியது.

நானும் எனது தோளில் கிடந்த தோற் பையைத் திறந்து கையில் கிடைத்த ஒரு நாணயக் குற்றியைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டேன்.

இரண்டொரு நாட்களின் பின், நான் கண்டி நகருக்கு ஓர் அலுவலாகச் சென்றிருந்தேன். அங்கும் அப்படி ஒரு சனக்கூட்டம்.

அன்று அழுதுகொண்டிருந்த அதே கோலத்தில், அதே பிள்ளைகளுடன் அதே மனிதனைச் சுற்றித்தான் அந்தச் சனக்கூட்டம் !

அவனது மடியிலே அவனால் போடப்பட்டிருந்த மூன்று சின்னஞ்சிறிய பருக்கைக் கற்கள் மடியிலே படுத்திருந்த பிள்ளையின் முதுகுப் புறத்தில் குத்தி வேதனையை உண்டாக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட என் மனம் பட்ட வேதனையை அடக்கிக் கொண்டு எதுவுமே பேசாது, பேச முடியாது வாழ வழி தெரியாத அந்த மனிதனை எண்ணியவளாக நடையைத் துரிதப்படுத்திக் கொண்டேன். *

(தினகரன் வாரமஞ்சரி—1978, 10, 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவை நோக்கி . . .

''லொக்... லொக்... லொக்...''

நகரின் வீதியோரத்தையொட்டியுள்ள ஒரு பொது மலசலகூடத்திற்கு முன்னால் இருந்து அந்த இருமல் ஒலி கிளம்பிக்கொண்டிருந்தது.

இன்றோ அல்லது நாளையோ மரண வாயிலில் நுழைய இருக்கும் வலுவிழந்த உடலைத் தாங்கிய ஒருவரது ஜீவ மரணப் போராட்டத்தின் 'முரசொலி' தான் அது.

பகல் முழுவதும் வெயிலிலே காய்ந்து, இரவின் குளிரைத் தாங்க முடியாத அந்த கிழவனின் குடும்பம் மட்டு மல்ல; அதைப் போல எத்தனையோ குடும்பங்கள் அப்படி யான இடங்களைத்தான் புகலிடயாக்கிக் கொள்ளுகின்றன.

அவன் மனைவி ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாக அந்த அன்புக் கணவனைச் சுமந்துகொண்டு எதிரே இருந்த பிரத்தியேக வைத்தியசாலை மருத்துவரிடம் ஓடுகின்றாள்.

''ஐயா! என்ட குழந்த குஞ்சுகள்ள முகத்துக்காக வெண்டாலும் இந்த மனிசன்ர உசிரக் காப்பாத்துங்க ஐயா'' அவள் மன்றாடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்க இருக்கிற?' எதையோ சொல்ல, எதையோ கேட்கிறாரே என்று அதிர்ந்தவளாகப் பதில் சொல்கிறாள்.

''இரிக்க ஒரு இல்லிடமில்ல ஐயா. பகலெல்லாம் வெயிலில காஞ்சு, இரவல குளிரில நடுங்கிறம்...''

''இந்த மனுஷனப் பிடிச்சிருக்கிற நோய்க்குக் குளிரே ஒத்து வராது கொண்டு போய் அரசாங்க ஆஸ்பத்திரி வாட்டில வை'' மருத்துவரின் உத்தரவு அவளை நிலை குலையச் செய்தது

''அங்க இடமில்லையாமே ஐயா...''

''அப்ப நான் என்ன செய்ய?'' என்ற மருத்துவர் ஏதோ ஒரு திரவக் கலவையைக் கொடுத்து அவளை அனுப்பி வைக்கிறார்.

மீண்டும் இருமிக்கொண்டே இருக்கின்றான், அவனது உடலைத்தானும் மூடிக்கொள்ள ஒரு சீலைத் துண்டு இல்லாத அந்தக் குடும்பம்!

நடு இரவின் வரவு, அந்தக் கிழவனைத் தவிர எல்லோ ரையும் நித்திரைக்கு அழைத்துச் சென்றுவிட்டது அந்த இரவிலே அந்தக் குளிரும் நோயும் அவனை மரணத்துக்கே அழைத்துச் சென்றுவிட்டன.

''ஐயோ அத்தான்! எங்கள நட்டாத்துல கையுட்டுப் போயிட்டீகளா?'' என்றாவாறு ஓலமிட்ட அவனது மனைவி யின் கண்களுக்கு அவனது உயிரைப் பலிகொண்ட கடுங் குளிர் தென்படவில்லை. ஆனால், அங்கே புதிதாக நிறுவப் பட்டு வந்த வீடமைப்புத் திட்டங்களே தென்பட்டன.

அந்தக் கிழவனின் உயிரைப் பலி கொண்ட குளிரிலிருந்து எதிர்கால சந்ததிகளாவது பாதுகாப்புப் பெற அந்தத் திட்டங்களிலுள்ள ஒரு வீடாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அந்தக் குடும்பங்கள் விடிவை நோக்கிக் கொண்டிருந்தன!

*

(தினகரன் வாரமஞ்சரி — 1978. 08. 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய குறை

தனது ஏக புதல்வனுக்கு ஏழு இலட்சம் ரூபா பெறுமதி யான வீடு, ஐந்து இலட்சம் ரூபா ரொக்கம், இருபது பவுண் தங்க நகைகள், பத்து ஏக்கர் வயல் நிலம் என்றும் வரதட்சணையோடு அழகான ஒரு பெண்ணைப் பேசி சம்பந்தம் ஒன்று வந்தபோது மகிழ்ச்சியில் வாயைப் பிழந்தார் பென்சனியர் பரீத்.

முப்பது வருடங்கள் அரசாங்க ஊழியராக இருந்து இளைப்பாறிவிட்ட பரீதின் மனைவி ஹபீபாவும் ஒரு இளைப்பாறிய அரசாங்க பாடசாலை ஆசிரியைதான். அவர்கள் இருவருக்கும் கிடைக்கும் இளைப்பாற்றுச் சம்பளம், 'எக்கவுண்டன்' ஆகத் தொழில் பார்க்கும் அவர்களது ஏக புதல்வனின் சம்பளம் என்பவற்றோடு எந்தவிதக் குறைவுமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பம்தான் அது.

அந்தக் காலத்திலேயே காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பரீத்துக்கு, இந்தப் பெரிய தொகை தனது மகனுக்கு வரதட்சணையாகக் கிடைக்கப் போவதை நினைத்தபோது ஏற்பட்ட பூரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அந்தத் தம்பதியர், தாம் சேவையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்பாறும்போது கிடைத்த பணிக்கொடை முப்ப தாயிரம் ரூபாயைவிட, பெரியதொரு தொகையை ஒரே தடவையில் தம் வாழ்நாளில் கண்டதேயில்லை.

''பொண்ணுட வாப்பா கரீம் உங்கட பழைய பிரண்ட் தானே, பொண்ணும் வடிவு. நல்ல இடம். யோசிக்காம முடிவச் சொல்லுங்க மாஸ்டர்'' கல்யாணத் தரகர்தான் முடிவுக்காக அவசரப்படுத்தினார்.

''யோசிக்கத் தேவையில்ல புறோக்கர் நானா. நாங்க புருஷன் பொஞ்சாதி ரெண்டு பேரும் விரும்புகிற இடத்தில மகன் கல்யாணம் முடிப்பான். மகனுக்கும் பொண்ணைத் தெரியும்தானே. எதுக்கும் ஒருக்கால் நம்மட மனுசி வந்ததும் ரெண்டு பேருமாச் சேர்ந்து அந்த விருப்பத்தைச் சொல்லுறமே''

இந்தச் சாதகமான பதிலோடு கலியாண புறோக்கர் வெளியேறி விட்டார். உத்தியோக பூர்வமான பதிலுக்காக அன்று பின்னேரம் வருவார்.

இளைப்பாறிய பின்னரும் பொழுதைப் போக்குவதற் காக சிறுவர் பாடசாலையில் படிப்பிக்கும் ஹபீபா, வீடு திரும்பியதும் பென்சனியர் பரீத் தமது மகனுக்கு வந்துள்ள திருமணப் பேச்சுவார்த்தையைப் பக்குவமாக எடுத்துரைத் தார்.

''உங்கட பிரண்ட் கரீம்ட வீட்டிலதானா மகனுக்கு கலியாணம் பேசி வந்திருக்கிறாங்க?''

''ஆமா ஹபீபா. நம்மட மகன் அதிர்ஷ்டக்காரன்தான். ஐந்து லட்சம் ரூபா ரொக்கமாகவே கிடைக்கப் போகுது'' மகிழ்ச்சியில் துவண்டு சொன்னார். பென்சனியர் பரீத்.

''எது எப்படி இருந்தாலும் வேண்டாம் அந்தச் சம்பந்தம்'' தீர்க்கமாகச் சொன்னாள் ஹபீபா, தனது மூக்குக் கண்ணாடியைக் கையில் கழற்றியவாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் ஹபீபா... இவ்வளவு பெரிய சீதனத்தோடே நல்ல இடத்தில சம்பந்தம் வைக்க விருப்பமில்லாத உனக்குப் பயித்தியமா பிடிச்சிருக்கு?''

''எல்லாம் நல்லந்தான். ஆனா ஒரு பெரிய குறையு மிருக்கு. நாம ரெண்டு பேரும் அரசாங்கச் சம்பளம் எடுத்து உழைக்கிற காலத்தில, ரெண்டு சம்பளம் எடுக்கிற உங்களுக்கு மிச்சம் பிடிக்க இயலாம அவ்வளவு என்ன செலவு? எண்டும், இப்பவும் ரெஸ்டு பேரும் பென்ஷனும் மகன் சம்பளமும் எடுக்கிறதைப் பார்த்து மூணு சம்பளம் எடுத்துக்கிட்டு மிச்சம் பிடிக்க இயலாதா? ஏன் அப்படிச் செலவு செய்யிறீங்க? எண்டும் வரவு செலவுக் கணக்குப் பார்க்கிறவங்கதான் அந்தக் கரீமும். அவர் பொஞ்சாதியும். அப்பிடியானவங்க நாளைக்கு நம்மட மகன் அவங்கட பொண்ணைக் கலியாணம் முடிச்ச பிறகு, அந்த ஐந்துலட்சம் ரூபாய்க்கும் சொத்து சுகத்துக்கும் கணக்கு கேட்கமால இருக்கப் போறாங்க. வேண்டாம் அப்படியான சம்பந்தம்''

தீர்க்கமாக வேதனது முடிவைச் சொல்லிவிட்ட ஹபீபா, தான் கொண்டு வந்த புத்தகங்களை மேசையில் போட்டு விட்டு நகர்ந்தாள் சமையல் கட்டை நோக்கி. ★

(தினகரன் வாரமஞ்சரி — *1991-05-12*)

(வீரகேசரி வாரவெளியீடு — *1992-01-19*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாற்றம்

தனது வீட்டுக்கு வந்திருந்த விருந்தாளிலய—நண்பனை அதிகாலை 'சுப்ஹ'த் தொழுகைக்காக அழைத்துக் கொண்டு பள்ளிவாசலை நோக்கிச் சென்று கொண்டிருந் தான் றபியுல்தீன்.

நகர்ப்புறப் பகுதியொன்றிலிருந்து வந்திருந்த நண்பன் நவ்பருக்கு, தனது கிராமத்தைப் பற்றி றபியுல்தீன் மேலும் சில விளக்கங்களை அளித்தவனாகச் சென்று கொண் டிருந்தான்

''மச்சான்! ஒரு செருப்பை மட்டும் அவ்விடத்தை கழட்டி வை. மற்றக் காலுக்குரிய செருப்போடு வா... அவ்விடத்தில கொண்டு போய் போடுவம். இல்லாட்டா யாரும் எடுத்துட்டுப் போயிடுவானுகள்''

றபியுல்தீன் இப்படிச் சொல்லியவாறே ஒரு காலில் இருந்த 'பாட்டா' செருப்பை பள்ளிவாயலின் முன் வாசற் படியின் ஒரு தொங்கலிலே கழற்றிவிட்டு, மற்றதை உட்பக்கமாகக் கழற்றிப் போடுவதற்காக நடந்தான்.

''எங்கட டவுண் புறத்திலதான் இந்த செருப்புக் களவு இருக்குதென்டு நான் நினைச்சிருக்கிறன். உங்கட கிராமப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்திலயும் அப்பிடித்தானா...?'' என்றவாறு தனது செருப்புக்கள் இரண்டையும் அவ்விடத்திலேயே கழற்றி விட்டு பின்தொடர்ந்தான் நவ்பர்.

''எல்லோரும் மனிசன்தானே... நம்மட பள்ளிகளில மட்டுமா இது நடக்குது. பன்சல்களிலயும், கோவில்களிலயும் இதே கதைதான் எண்டதை எண்ட இந்து, பௌத்த நண்பர்களே மனந்திறந்து சொல்லியிருக்காங்கள்...''

''மச்சான் டேன்... நம்மட செருப்பு களவு போக வேண்டும் என்ட ஒரு விதியிருந்தா அத எந்த இடத்தில, எப்பிடிப் பாதுகாப்பா வெச்சாலும் களவு போகவேதான் செய்யும், அப்பிடி ஒரு விதி இல்லாட்டி அத நடு ரோட்டில போட்டிட்டு வந்தாலும் அப்பிடியே கிடக்கும்...'' தான் தனது செருப்புச் சோடியை ஒரே இடத்திலேயே கழற்றிப் போட்டுவிட்டு வந்ததற்கு காரணம் சொல்லிவிட்டு, நண்பனின் முகத்தைப் பார்த்தான் நவ்பர்.

''நோ... இல்லவேஇல்லை, இதுமாதிரி ஒரு காலுக்குரிய செருப்ப ஒரு இடத்திலயும், மற்றக் காலுக்குரிய செருப்ப கொஞ்சம் தள்ளி வேற ஒரு இடத்திலயும் போட்டா செருப்புக் களவுக்கு வாறவன் அத விட்டுட்டு, சோடியாக் கிடக்கிற செருப்பைத்தானே எடுப்பான்... யூனிவசிட்டியில படிக்கிற காலத்திலயிருந்தே நீ, நான் செய்யிறதுக்கு எதிர்மாறாகவே செய்து பழக்கப்பட்டவனாச்சே...''

தொழுகைக்காக அனைவரும் தயாரானதும், 'வுழு' செய்து கொண்டு அவர்களும் சேர்ந்து கொண்டனர்.

தொழுகை முடிந்ததும் பலர் பள்ளியைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்

றபியுல்தீன், புதிதாகக் கட்டப்பட்ட அந்தப் பள்ளிவாயலின்மேல் மாடியை காண்பிப்பதற்காக நண்பன் நவ்பரை அழைத்துக் கொண்டு மேலே சென்றான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகையை முடித்துக்கொண்டு, எதிரே இருக்கும் ஹோட்டலில் சூடாய் ஒரு 'பிளேன் ரீ' குடிக்கும் நோக்கத்தோடு பள்ளியைவிட்டு வெளியிறங்கிய அந்தக் கிழவரின் கண்களில் பள்ளிவாயலின் முன் வாசற்படியின் ஒரு தொங்கலில் போடப்பட்டிருந்த நவ்பரின் புத்தம் புதிய 'பாட்டா, செருப்புச் சோடியும், றபியுல்தீனின் இடது காலுக்குரிய 'பாட்டா' செருப்பின் ஒற்றையும் பட்டன.

'இந்தப் புதிய பாட்டாச் சோடிய யாரோ மறந்து போட்டுட்டுப் போயிருப்பாங்க. பள்ளிக்கு உள்ளயும் ஒருவரும் இல்லையே. இடக்காலுக்குரிய 'பாட்டா'வின் ஒற்றை யாரோ தேவையில்லையெண்டு கழிச்சிட்டுப் போனதாகத்தான் இருக்கும். இந்த இடது காலுக்குரிய பாட்டாவை காலிலே கொழுவிக்கிட்டுப் போனா வீட்டுல கிடக்கிற வலது காலுக்குரிய ஒற்றையோட சேர்த்துப் போடலாம்...' இப்படி நினைத்தவராக, ஒற்றையாகக் கிடந்த 'பாட்டா' செருப்பை தனது இடதுகாலில் மாட்டிக் கொண்ட அந்தக் கிழவர் மனதிலே எந்தக் கபடமுமில்லாமல் ஒரு மாதிரியாக நடந்து கொண்டிருந்தார், தன் வீட்டை நோக்கி.

பள்ளிவாயலின் மேல் மாடியிலிருந்து கீழே இறங்கிய நண்பர்களில் றபியுல்தீன் பள்ளியின் உட்புறம் வைத்திருந்த தனது 'பாட்டா' செருப்பின் வலது ஒற்றையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியேறியபோது, முன் வாசற்படியின் ஒரு தொங்கலில் போட்டிருந்தவற்றில் றபியுல்தீனின் 'பாட்டா'வின் ஒற்றை மட்டும் காணாமல் போயிருந்ததைக் கண்டு. ஆளுக்காள் முகத்தைப் பார்த்துக் கொண்டனர். நவ்பரின் புத்தம் புதிய 'பாட்டா' செருப்புச் சோடி அப்படியே கிடந்தது.

ஏற்கனவே பட்டி அறுந்துவிட்டதால் தனித்துக் கிடக்கும் தனது வலது காலுக்குரிய 'பாட்டா' செருப்பின் ஒற்றைக்கு சோடி சேர்க்கும் நோக்கத்துடன் அந்தக் கிழவர் தூரத்தே இடக்காலை இழுத்து இழுத்து வேகமாக நடந்து கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதங்காத மலரொன்று

## [1]

சரீனாவுக்கு அந்தக் கடிதத்தைப் பார்க்கும்-நினைக்கும் போதெல்லாம் அவளது மனதில் ஏனோ ஒரு இனமறியாத பயம் அவளை ஆட்கொண்டது இருந்தும் அந்தக்கடிதத்தை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற ஒரு ஆவலும் அவளுக்கு ஏற்படத்தான் செய்தது.

க பொ த. உயர்தரப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தும் ஓரிரண்டு புள்ளிகள் வித்தியாசத்தால் பல்கலைக்கழக அனுமதி பெறும் வாய்ப்பை இழந்து விட்டாலும், கல்வித் தாகம் காரணமாக வெளிவாரியாகப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் நோக்கில் தன் பிறந்த ஊரான தென்மாகாணத்திலுள்ள மாத்தறையிலிருந்து மத்திய மாகாணத்திலுள்ள பேராதனைக்கு வந்திருப்பவள் தான் சரீனா.

மகாவலி கங்கையின் கிளைகள் பரந்து ஓடும் பேராதனையில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் பயிலும் தனது சிநேகிதிகளின் தொடர்பு, தனது கல்வித் தாகத்தைத் தீர்க்கும் என்ற எதிர்பார்ப்பு சரீனாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உயர்படிப்பை நோக்கமாகக் கொண்டு பேராதனைக்கு அவள் வரக்காரணம் தனது உடன் பிறப்பான அண்ணன் சாகிர், அவரது நிரந்தர வசிப்பிடமாக பேராதனையை ஆக்கிக் கொண்டதால் அவரது வீட்டில் தங்கியிருந்து படிப்பது அவளுக்கு பல வகையிலும் வசதியாயிருந்தமையேயாகும். அவளது அண்ணன் சாகிரும், அவன் மனைவி பாமிலாவும் ஆசிரியர்கள். அவர்கள் பாடசாலைக்குப் போகும் நேரத்தில் அவர்களுக்குத் தேவையான வீட்டு, சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டு இருந்து அவள் படிப்பது சரீனாவின் அண்ணனுக்கும், மதினிக்கும் உதவியாயிருந்ததால் சரீனாவைத் தம்மோடு மனம் விரும்பி வைத்திருந்தனர்.

சரீனா தனது அறைக்கதவுத் திரைச் சீலையினூடாக உற்று நோக்கினாள். அவளது மதினி பாமிலா இரவு உணவுக்கான சமையல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது அவளுக்கு. மதினியின் பிள்ளைகள் இரண்டும், பாடப் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருந்தனர். அவளது அண்ணன் சாகிர், பள்ளிவாயலுக்குப் போனால் வருவதற்கு இரவு எட்டரை மணியாகும்.

கடிதத்தை எடுத்துப் பிரித்து எத்தனையாவதோ தடவையாகப் பார்க்கத் தொடங்கினாள்

'அன்புள்ள சரீனாவுக்கு,

இக்கடிதத்தை எப்படி ஆரம்பிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை. இருந்தும் ஏதோ ஒரு இன்மறியாத தைரியம் இக்கடிதத்தை எழுதுவதற்கு என்னைத் தூண்டிற்று.

நீங்கள் அன்று கடைக்கு வந்து சாரியொன்றைப் பார்த்துவிட்டு காசு போதாமையினால் பின்னர் வாங்குவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டீர்கள், ஆனால் அந்த சாரியின் டிசைன் உங்களுக்குப் பிடித்திருப்பதை அறிந்த நான் காசைப் பற்றி யோசிக்காது எடுத்துச் செல்லும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியும் நீங்கள் மறுத்து விட்டீர்கள். அன்றிலிருந்து எனது மனம் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கின்றது.

நான் ஒரு பிடவைக் கடை நடத்துபவன் என்பதால் எத்தனையோ பெண்களைக் கண்டிருக்கிறேன்; பேசியிருக்கிறேன்; பழகியிருக்கிறேன். ஆனால் ஏனோ தெரியாது உங்கள் மீது எனக்கு ஒரு இனமறியாத அன்பு ஏற்பட்டு விட்டது.

நீங்கள் விரும்பினால், நான் உங்களுக்குக் காலமெல்லாம் உதவி செய்யக் காத்திருக்கின்றேன். உங்கள் விருப்பத்தை எதிர்பார்க்கின்றேன்,

இப்படிக்கு
உங்கள் அன்பை நாடும்,
சாலி.

சரீனா தனது அண்ணன் வீட்டுக்கு—பேராதனைக்கு வந்து சுமார் ஒரு வருடமாக சாலியை அவளுக்குத் தெரியும். ஏனெனில் அவளின் அண்ணன், மதினி எல்லோரையுமே சாலிக்கு நன்றாகத் தெரியும். நல்ல அறிமுகம், மாத்தறையில் இருந்த அவளின் மூத்த அண்ணனைக்கூட சாலிக்கு அறிமுகம். பேராதனை நகரில் அமைந்திருக்கும் 'சாரி ஹவுஸ்' உரிமையாளர்தான் சாலி வயது முதிர்ந்த அவனது தந்தை மூலம் அவனுக்குக் கிடைத்த அந்தக் கடையைத் திறம்பட நடாத்திவந்தான் சாலி.

சரீனாவின் அண்ணன், மதினி எல்லோருமே 'சாரி ஹவுஸ்'சில்தான் தமக்குத் தேவையான உடுபிடவைகளை வாங்குவது வழக்கம். அதனால் சரீனாவும் தனக்குத் தேவையான துணிவகைகள், 'லேஸ்', தையல்நூல் போன்ற பொருட்களை அங்குதான் வாங்கினாள்.

அன்று சரீனா வாங்க நினைத்த சாரிக்கான பணம் கையில் போதாமல் இருந்தது ஆனால் அவளுக்கு அந்த சேலையின் மோஸ்தர் மனதுக்குப் பிடித்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சல்லியப் பத்தி யோசிக்காம சாரியை எடுத்துக்கிட்டுப் போங்க தங்கச்சி ..'' சாலியின் இந்த வற்புறுத்தலிலிருந்து மாத்திரமல்ல, கடந்த காலமாக அவன் அவளோடு பழகும் விதத்தில் இருந்தும் தன் மீது அவனுக்கு ஏதோ ஒரு வகைப் பாசம் இருப்பது சரீனாவுக்குப் புரியத்தான் செய்தது. இருப்பினும் அவள் அந்தச் சேலையை வாங்காது வந்து விட்டாள்.

அதன் பின்னர் ஒருநாள் அவள் அக்கடைக்கு போன போது சாலி அவளிடம் கொடுத்த கடிதம்தான் இப்போது அவளை கடந்த இரண்டு மூன்று நாட்களாகக் குழப்பிக் கொண்டிருக்கிறது.

அவளது கையிலிருந்த பேனா இரண்டொரு வரிகளை கிறுக்கித் தள்ளின.

'அன்புள்ள சாலி அவர்களுக்கு,

உங்கள் கடிதத்துக்கு என்ன பதில் எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லை. எனக்கும் உங்கள் மீது ஒரு இனமறியாத பற்றுதலும், நம்பிக்கையும் உண்டு. இருந்தாலும் எனது பெற்றோரினதும் சகோதரர்களினதும் விருப்பத்தின் பின்னர்தான், எல்லா முடிவும் சொல்லலாம். எனக்குப் பயமாக இருக்கிறது. இதைப் பார்த்ததும் கிழித்து எறிந்துவிடுங்கள்.

இப்படிக்கு,
அன்புள்ள சரீனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [2]

சரீனா கடிதம் எழுதி சாலியிடம் ஒப்படைத்த பின்னர் வந்த இரண்டு நாட்களையும் இருவரும் மிகவும் கஷ்டப்பட்டு, ஆனால் இன்ப நினைவுகளுடன் கடத்திக் கொண்டிருந்தனர். சரீனாவுக்கு உண்ண, உறங்கப் போகும் போதெல்லாம் சாலிதான் அவள் மனக்கண் முன் வந்து நின்றான். அவள் படிப்பதற்காகப் புத்தகங்களைப் புரட்டி கொஞ்சம் படித்துக்கொண்டு போகும்போது இடையிடையே அவளது நினைவில் சாலிதான் வந்துநின்றான்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்கழகத்துக்குத் தனது நண்பிகளிடம் படிப்பதற்காகச் சென்று வந்த வழியில் தான், அவள் சாலியிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தாள். மீண்டும் அடுத்த சனிக்கிழமைதான் அவள் வழக்கமாக பல்கலைக்கழகம் போக வேண்டும். அதுதான் வழக்கம். இருந்தாலும் அதற்கிடையில் சென்று சாலியைச் சந்திக்க வேண்டும்போல் இருந்தது சரீனாவுக்கு

அன்று புதன்கிழமை. சரீனாவின் மதினி பாமிலா பாடசாலைக்குப் போவதற்காக அவசர அவசரமாகப் புறப் பட்டுக் கொண்டிருந்தாள். சரீனாவின் அண்ணன் சாகிர் பாடசாலைக்குப் போவதற்காக ஒருபக்கம் தயாராகிக் கொண்டிருந்தான்.

இந்தக் காலம், கணவனும் மனைவியும் தொழில் செய்யாவிட்டால் சாதாரண குடும்பத்தினரைப் பொறுத் தவரை வாழ்க்கையை ஓட்டுவது சிரமமான காரியந்தான். இருந்தாலும் அப்படித் தொழில் செய்யும் தம்பதியருக்கு வேலை நாட்களின் இந்தக் காலை வேளையைப்போல் ஒரு வெறுப்பான சமயம் வேறு இல்லை.

பிள்ளைகளைத் தயார்படுத்திவிட்ட சரீனா, தன் மதினி யிடம் தயங்கித் தயங்கிப் பேசினாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மதினி... இண்டைக்கு கொஞ்சம் நேரத்தோடே உங்களுக்கு வர இயலுமோ? நான் இண்டைக்கு கம்பசுக்குப் போக வேணும்...''

''ஏன் சரீனா?... நீங்க வழக்கமா சனிக்கிழமைதானே போவீங்க...'' பாமிலா தான் கேட்டாள்.

''எண்ட பிரண்டுட நோட்ஸ் கொஞ்சம் கொண்டு வந்தன். இண்டைக்கு திருப்பிக் கொண்டுவந்து தாறதாக புறமிஸ் பண்ணித்தான் கொண்டுவந்தன். அதாலதான் மதினி அவசரப்படுறன். இண்டைக்கு எப்பிடியும் கொண்டு போய்க் கொடுக்க வேணும்''

''எனக்கெண்டால் இண்டைக்கு ஒரு கிளாசுக்கு முக்கிய பாடம் இருக்கு அப்பிடியெண்டா நான் நானாவை வரச் சொல்லுறன்'' பேசியவாறே தனது கணவன் சாகிரைப் பார்த்தாள்.

சாகிர் நேற்றுப் பின்னேரம் கழுவிப் போட்ட தனது 'சேட்'டை அவசர அவசரமாக மின்சார இஸ்திரிக்கையால் அழுத்திக் கொண்டிருந்தான்.

''ஏய்... இண்டைக்கு உங்களுக்கு கொஞ்சம் நேரத்தோட ஸ்கூலில இருந்து வர இயலுமோ? உங்கட தங்கச்சி யூனிவசிட்டிக்குப் போகவேணுமாம்...''

அவர்களின் உரையாடலுக்கு ஏற்கனவே சாகிர் செவி மடுத்திருந்ததால் எதுவும் விசாரியாது ''நான் பகல் பன்னிரண்டு மணிக்கு வாறன், வந்த பிறகு தங்கச்சி போகட்டும்'' என்றான்.

சமையல் வேலைகளை அவசர அவசரமாக முடித்து விட்டு தனது அண்ணன் வரும்வரை அடிக்கடி மணிக்கூட்டைப் பார்த்தவாறே நேரத்தை மிகச் சிரமத்துடன் கடத்திக் கொண்டிருந்தாள் சரீனா. ஒவ்வொரு மணித்தியாலமும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாள் போலக் கழிந்து கொண்டிருந்தது அவளுக்கு.

'டிங்... டாங்...' வீட்டின் அழைபபு மணி ஒருமுறை மாத்திரம் ஒலித்து ஓய்ந்தது.

'நானா பன்னிரண்டு மணிக்குத்தானே வருவதாகச் சொன்னார், நேரத்தோடு வந்துவிட்டார்போலும்' என்று நினைத்தவளாக ஓடிச்சென்று கதவைத் திறந்த சரீனா, திடீர் அதிர்ச்சிக்குள்ளானாள்.

சாலிதான் புன்னகைத்தவாறு நின்று கொண்டிருந் தான், சரீனாவுக்கு நடுக்கம் பிடித்தது. எதை, எப்படிப் பேசுவது என்று தெரியாமல் பதைபதைத்தாள்.

'உஸ்... ஏன் இஞ்ச வந்தீங்கள்?... இப்போ நானா ஸ்கூலிலயிருந்து வந்திடுவார்' சரீனாவின் பேச்சில் ஓர் உரிமைத் தொனியும் பதற்றமும் காணப்பட்டன.

'உங்கட நானாவுக்கு நான் என்ன பயப்படவா வேணும்?'

'நீங்க பயப்படத் தேவையில்லை. ஆனால் நான் பயப் படுறன்...' சரீனாவும் விட்டுக் கொடுக்க மாட்டாத கெட்டிக்காரி என்பதை அவளது பேச்சு எடுத்துக் காட்டிற்று.

'உங்கட சம்மதம் கிடைச்ச பிறகு, நான் ஒரு தீர்மானத் துக்கு வந்திருக்கிறன் சரீனா. உங்கட விருப்பப்படி உங்கட மூத்த நானா, உம்மா, வாப்பா எல்லாரையும் சந்திச்சு நாம இரண்டு பேரும் விரும்புறத தெரியப்படுத்தி அவங்களுக்கிட்ட விருப்பம் கேட்கப் போறன்'

சாலியின் பேச்சில் வெள்ளை உள்ளமும் ஓர் உறுதிப் பாடும் காணப்பட்டன.

'எங்கட உம்மா, வாப்பா உங்கள விரும்பா விட்டால்...?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்களைக் கடத்திக்கொண்டு போவேன், சரீனா...'

கதவடியில் நின்றே கதைத்துவிட்டு, மாத்தறை நகரில் இருந்த சரீனாவின் வீட்டு முகவரியை வாங்கிக் கொண்ட சாலி வருகிற வெள்ளிக்கிழமையே கடையை அடைத்து விட்டு மாத்தறைக்குப் போவதாகக் கூறிவிட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

கதவைச் சாத்திவிட்டு வீட்டினுள்ளே சென்ற சரீனா தமது தொடர்பைப் பற்றியும், சாலி விருப்பம் கேட்டு மாத்தறைக்கு வருவது பற்றியும் தெரிவித்து தனது வீட்டுக்கு அவசர அவசரமாக ஒரு கடிதத்தை எழுதி முடித்தாள்.

அவளது அண்ணன் சாகிர் பாடசாலையிலிருந்து வந்ததும், பல்கலைக்கழகத்துக்குச் செல்ல அனுமதி பெற்ற சந்தர்ப்பம் அக்கடிதத்தை அன்றே தபாலிலிட வசதியாயிற்று.

## [3]

வழக்கம்போல அந்தச் சனிக்கிழமையும், பல்கலைக் கழகத்துக்குப் போய்த் தனது சிநேகிதியிடம் படிப்பு சம்பந்தமான சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அவர்களிடம் பாடக் குறிப்புக்களையும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் சரீனா.

அவள் போகும்போது சாலியின் 'சாரிஹவுஸ்' பக்கமாக நோட்டம் விட்டாள். கடையில் இருக்கும் உதவியாள் பையன் மாத்திரம்தான் கடையினுள் இருந்தான். அதனால் சாலி நேற்று மாத்தறைக்குச் சென்றிருப்பார் என்பது சரீனாவுக்கு நிச்சயமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பும் வழியில் 'சாரி ஹவுசை' அவள் நெருங்கவும் அவளின் மூத்த அண்ணன் அக்கடைக்குள்ளிருந்து வெளியேறவும் சரியாக இருந்தது. அவருக்குப் பின்னால் அவரை வழியனுப்ப சாலியும் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தான்

'நானா எப்போ வந்தீங்க?...'

'இப்ப வாற பயணம்தான் சரீனா. நீங்க வாசிட்டிக்குப் போய் வருகிற பயணமா?' என்று கேட்டவாறு முகத்தைத் திருப்பி 'மிஸ்டர் சாலி அப்போ நான் வாறன். சீ யூ' என்று சாலியைப் பார்த்துக் கூறியவாறு சரீனாவுடன் சேர்ந்து கொண்டான், அவளது மூத்த அண்ணன்.

சாலி, வாயைப் பிளந்தவாறு சரீனாவும் அவளது அண்ணனும் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சரீனாவுக்கு விடயங்கள் புரிந்தாலும் ஒரு வகைப் பதற்றத்துடன் இளைய அண்ணன் சாகிரின் வீட்டை நோக்கித் தனது மூத்த அண்ணனைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தாள்.

'வீட்டில் உம்மா, வாப்பா, மதினி, பிள்ளையள் எல்லாரும் சுகமா நானா?...' அமைதியைக் குலைப்பதற்காக சரீனா பேச்சைக் கொடுத்தாள்.

'டிங் டொங், டிங் டொங்' அழைப்புமணி ஒலிக்கின்றது.

'ஆ... வாங்க மச்சான்... வாங்கோ' கதவைத் திறந்த அவர்களின் மதினி பாமிலாதான் வரவேற்றாள்.

'அரபாத், பாசித்... இன்னா பெரியப்பா வாராங்க' என்று வீட்டின் பின்புறமாக விளையாடிக் கொண்டிருந்த தனது மக்களுக்கும் குரல் கொடுத்தாள்.

'நானா எப்ப வந்த?...' என்று வியப்புடன் கேட்டவாறு பின்னால் வந்துகொண்டிருந்தான் 'மார்க்கெட்'டுக்குப் போயிருந்த சாகிர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டினுள் உட்கார்ந்த சரீனாவின் மூத்த அண்ணன் தன் தம்பி சாகிரின் வீட்டினுள் ஒருமுறை நோட்டமிட்டான்.

தன் தம்பி இரண்டு வருட லீவில் சவூதிஅரேபியாவுக்குத் தொழில் நிமித்தம் சென்று வந்த பின்னர் இன்றுதான் தம்பியின் வீட்டுக்கு வந்துள்ளான். குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, 'வீடியோ' என்றெல்லாம் வெளிநாட்டிலிருந்த தனது தம்பி கொண்டு வந்த பொருட்கள், புதிதாக வாங்கிய அவர்களது வீட்டை அலங்கரித்தன.

தன்னைப்போல இலங்கையிலேயே அரச உத்தியோகத்தோடு மாரடிக்காது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி லீவு எடுத்துக்கொண்டு இரண்டு வருடங்களில் உழைத்துக்கொண்டு வந்து வாங்கியுள்ள வீட்டையும், பொருட்களையும் போன்று, தன்னால் ஈட்டுவது கஷ்டம் என்பது அவனுக்குப் புரிந்து அது ஒரு பெருமூச்சாக வெளிவந்தது.

பகல் சாப்பாட்டை முடித்துவிட்டு முன் வராந்தாவில் போடப்பட்டிருந்த கதிரைகளில் உட்கார்ந்து எல்லாரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சரீனா தனது அறையினுள்ளே இருந்து பாடக் குறிப்பொன்றைப் படித்துக் கொண்டிருந்தாள். அவளது பார்வை அவற்றில் நிலைத்தாலும் அவர்களின் பேச்சுக்கும் செவிமடுத்துக் கொண்டிருந்தாள்.

''தம்பி சாகிருக்கு விஷயம் தெரியுமோ... நம்மட சாரி ஹவுஸ் சாலி, தங்கச்சி சரீனாவை விரும்புறாராம். நேற்று மாத்தறைக்கு வந்து விருப்பம் கேட்டா. அவர் சீதனம் ஒண்டுமே எதிர்பார்க்கவில்லையாம் சரீனாவை நல்லாப் புடிச்சிருக்குபோல, சாலியும் நல்ல பொடியன்தானே. நம்மட உம்மா, வாப்பா எல்லாரும் விருப்பம்தான். சும்மா வாற மாப்பிள்ளை. அதுவும் வசதியான பொடியன்...' சரீனாவின் மூத்த அண்ணன் பேசிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெசமாகவா மச்சான்... அப்பிடியெண்டால் அது எவ்வளவோ நல்லது' சாகிருக்கும் முந்திக்கொண்டு சொன்னாள் பாமிலா.

'சரீனாவுக்கும் விருப்பம் எண்டால் நல்லதுதானே' சாகிர்.

'சரீனா... சரீனா' மதினி பாமிலா கூப்பிட்டாள்.

'.........' சரீனா மௌனம் சாதித்தாள்.

'அவள்ட விருப்பத்தோடதானே சாலி மாத்தறைக்கு வந்த...' மூத்த அண்ணன் சரீனாவை சங்கடத்திலாழ்த்த விரும்பவில்லை.

சரீனாவுக்கு அன்றிலிருந்து, அவளின் இளைய அண்ணன் சாகிருடையதும் மதினி பாமிலாவினதும் முகங்களைப் பார்க்கவே வெட்கமாயிருந்தது

'அவர்கள் மட்டும் என்ன? அவர்களும் ஒருவரை ஒருவர் விரும்பி... இரு பக்கத்திலும் உம்மா, வாப்பா விரும்பாமல் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் துணிந்து கலியாணம் முடிச்சவர்கள்தானே...' என்று நினைத்தபோது சரீனாவுக்கு ஒரு துணிவு பிறக்கத்தான் செய்தது.

சமையல் வேலையில் மதினிக்கு உதவிக் கொண்டிருந்தாள் சரீனா.

'சாலியின் உம்மா வாப்பாவுக்கு இந்த விஷயம் தெரியுமாமா சரீனா?' மதினி பாமிலா விசாரித்தாள்.

அதைப் பற்றித் தனக்குத் தெரியாது என்று சொல்லுமாப்போல தலையசைத்தாள் சரீனா.

'எலுகொட ஆட்கள் பொல்லாதவங்க சரீனா. சாலியிட உம்மா, வாப்பா விரும்பினால்தான் இந்த விஷயத்தில நீங்க காலெடுத்து வைக்க வேணும்' மதினியின் எச்சரிக்கை ஏனோ சரீனாவுக்கு அறவே பிடிக்கவில்லை. இந்த எச்சரிக்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அண்ணன்மார் முன்னிலையில் விடுத்திருக்கலாம் தானே, என்று நினைத்துக்கொண்டாள் சரீனா.

'மதினி நான் விருப்பம் தெரிவிச்ச பிறகு, இனி எப்பிடி இந்த விஷயத்தில பின்னிற்கிறது. அவர் எப்படியும் அவர்ட உம்மா வாப்பாவை சம்மதிக்க வைச்சுக் கொள்ளுவார்' என்றவாறு வெங்காயத்தை உரித்துக் கொண்டிருந்தாள் சரீனா. அவளது கண்களில் சுரந்த நீருக்கு வெங்காயத்தைக் காரணம் காட்டுமாப்போல் பாசாங்கு செய்தாள் சரீனா.

'சே... இந்தப் பொம்புளயளே இப்படித்தான். தங்கட விஷயம் என்றால் எப்பிடியும் சாதித்துக் கொள்ளுவார்கள். இப்படிச் சொல்லுற மதினியே எனது நானா சாகிரை 'லவ்' பண்ணும்போதும், ஏன்? அந்நியரின் ஆதரவோடு அவர்களின் திருமணம் நடந்தபோதும் அவளின் உம்மா, வாப்பாவைப் பற்றியோ என்னுடைய உம்மா வாப்பாவைப் பற்றியோ யோசித்துப் பார்த்தாவா? இல்லையே; எல்லோரின் எதிர்ப்புக்கும் மத்தியிலதானே எனது நானா சாகிரைக் கலியாணம் முடிச்சா. இப்போ மற்றவங்க விஷயத்திலதான் நீதி நியாயம், நல்லவங்க, பொல்லாதவங்க என்றெல்லாம் பார்க்கிறா'

தனக்குள் இப்படி நினைத்துக்கொண்ட சரீனா 'எல்லா ஊரிலேயும் நல்லவர்களுமிருக்கிறாங்க, கெட்டவங்களுமிருக்கிறாங்க. அதுக்காக இந்த ஊரவர்கள்தான் கெட்டவங்க, இந்த ஊரவர்கள்தான் நல்லவங்க என்று குறிப்பிட்டுச் சொல்றது பிழை, மதினி' எதிலும் நேர்மையாகவும், தீர்க்க தரிசனமாகவும் உணர்ந்து பேசும் சரீனா சொன்னாள்.

தனது பேச்சுக்கு எதுவுமே திரும்பப் பேசாது வேலைகளில் ஈடுபட்ட தனது மதினிதான் தனது காதலுக்கு எதிரி என்று தீர்மானித்துக் கொண்ட சரீனா, சமையலில் மதினிக்கு உதவிக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [4]

க. பொ. த. உயர்தரப் பரீட்சை சித்தியடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட உதவி ஆசிரியை நியமனம் சரீனாவுக்கும் கிடைத்தது. இப்போது சரீனா கெலிஓயாவிலிருந்து சற்று உள்ளே அமைந்திருந்த முஸ்லிம் மகளிர்மகா வித்தியாலயத்தில் ஆசிரியையயாகக் கடமையேற்றிருந்தாள்.

அவள் இருந்த பேராதனையிலிருந்து, கம்பளைப் பக்கமாக ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில்தான் இப்பாடசாலை இருந்தமையால் தன் அண்ணன் — மதினி வீட்டில் இருந்தே பாடசாலைக்குத் தினமும் சென்று வரக் கூடியதாயிருந்தது.

ஆனாலும், ஏனோ ஏற்கனவே தான் சாலியோடு கொண்ட தொடர்பின் பிறகு மதினி பாமிலா தன்னோடு அவ்வளவு மனம்விட்டுப் பேசவில்லை என்று சரீனாவுக்குப் புரிந்தது.

சரீனாவுக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்ததும் அதோடு ஜி. ஏ. கியூ. பரீட்சையில் சித்தியடைந்ததும், அவளது மதினி பாமிலாவுக்கு இன்னும் எரிச்சலைத்தான் கொடுத்திருக்கிறது என்பதை அவளின் நடவடிக்கைகளிலிருந்து சரீனா விளங்கிக் கொண்டாள்.

அன்று பாடசாலையிலிருந்து வழக்கம்போல வீட்டுக்குத் திரும்பினாள். ஆனால் என்றுமில்லாதவாறு அன்று அவளின் மதினி பாமிலா பாடசாலையிலிருந்து நேரத்தோடு வீடு வந்திருந்தாள். முன் வராந்தாவில் புது விருந்தினர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரோடு உரையாடிக் கொண்டிருந்த மதினி பாமிலா, என்றுமில்லாதவாறு அன்று தன்னோடு மனம்விட்டுப் புன்னகைத்துக் கொண்ட மாதிரி இருந்தது சரீனாவுக்கு.

தனது அறைக்குள் சென்ற சரீனா சாரியை மாற்றிக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் அவளின் அண்ணன் சாகிரும் வந்து விட்டான்.

'சரீனா... சரீனா...' பாமிலாதான் அவளைக் கூப்பிட்டாள்,

அமைதியாக வந்து முன் வராந்தாவுக்குப் போடப்பட்டிருந்த திரைச்சீலையைத் தனது கைகளால் விலக்கிப் பரர்த்தாள். வந்திருப்பவர் சரீனாவைப் பார்த்துப் புன்னகைத்தார். பதிலுக்குப் புன்னகைத்துக் கொண்ட சரீனா, திரைச்சீலையை நீக்கித் தனது கையால் பிடித்துச் சுவரோரம் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தாள்.

''வெட்கப்படாம இப்பிடி முன்னுக்கு வாங்க மதினி' பாமிலா சரீனாவை முன்னுக்கு வரும்படி அழைத்தாள்.

'இவர் எங்கட ஸ்டாஃப்தான், இக்பால் மாஸ்ட்டர். இவர் ஒரு பி.எஸ்சி.'

பார்ப்பதற்கு வாட்டசாட்டமான, அழகான இளைஞர் தான். மீண்டும் புன்னகைத்துக் கொண்ட அவரைப் பார்த்த போது, சரீனாவுக்கு அவர் மீது ஒரு கருணை பிறந்தது,

'பேசிக்கிட்டு இரியுங்கோ. இதோ வந்துடறேன்' என்று சொன்னவாறு, பாமிலா சமையலறைப் பக்கமாகச் சென்று பகல் உணவை 'டைனிங் டேபிள்'இல் வைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தாள்.

முன்னெப்போதுமே அறிமுகமில்லாத இக்பால் ஆசிரியரோடு கதைக்க வேண்டும் என்பதற்காக, ஏதோ கதைத்துக் கொண்டிருந்தாள் சரீனா.

பகல் உணவை முடித்துக்கொண்டு, இன்னும் சிறிது நேரம் இருந்துவிட்டு மாலைத் தேநீரையும் குடித்துவிட்டு, இக்பால் ஆசிரியர் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இக்பால் மாஸ்டர் நல்லொருவர். உம்மாவுக்கும் வாப்பாவுக்கும் ஒரேயொரு பிள்ளை. நிறையத் தோட்டம், சல்லி எல்லாம் அவருக்கு இருக்கு. அக்குறணைதான் அவர்ட ஊர். அவர்ட ஊரிலே சரீனாட ஃபிரண்ட் ஒண்டு படிப்பிக்கிறாவாம். அவ மூலம் சரீனாவைப் பத்தி அவர் கேள்விப்பட்டிருக்கிறாராம். சரீனாவுக்கு விருப்பம் எண்டால் பணம், நகை எதுவுமே இல்லாம முடிச்சுக்கிறாராம். கடந்த ஒரு கிழமையாக மதினிக்கிட்டக் கேட்டுச் சொல்லும்படி தொந்தரவு தந்துக்கிட்டே இருந்தார். அதுதான் இண்டைக்கு அவரக்கூட்டி வந்தன்' பாமிலா விடயத்துக்கு இறங்கினாள்.

'இறைவன் கொடுத்தும் சோதிப்பான்; எடுத்தும் சோதிப்பான்; தடுத்தும் சோதிப்பான்' என்று நினைத்தாள் சரீனா.

ஒருவருக்கு உத்தியோகமோ, தொழிலோ இல்லாத போது எதுவும் கிடைக்காமலே கஷ்டப்படுவார். ஒரு உத்தியோகம் கிடைத்துவிட்டால் ஒன்றுக்குப்பின் ஒன்று வந்து. எந்த உத்தியோகத்தைத் தெரிவது என்று அவரைச் சிக்கலுக்குள்ளாக்கும். பணமும், வறுமையும் அப்படித்தான். பணம் வரத் தொடங்கினாலும் வரும், போகத் தொடங்கினாலும் போகும். அதுபோலத்தான், தனக்கென்று ஒருவர் தன்னை நாடி வந்த பின்னர், இறைவன் அவளைச் சோதிக்கின்றான் என்று நினைத்தாள்.

'ஏன் மதினி? மிஸ்டர் சாலி என்னை விரும்பியிருக்கிறது உங்களுக்கு நல்லாத் தெரியும்தானே. அதை இக்பால் மாஸ்டருக்கிட்டச் சொல்லியிருக்கலாம்தானே மதினி' விநயமாகப் பேசினாள் சரீனா.

'சாலிக்கிட்ட எவ்வளவு காசு, பணம் இருந்தாலும் நிரந்தர கவ்மண்ட் ஜொப் செய்யுற சரீனாவுக்கு அவர் அவ்வளவு பொருத்தமில்ல. அதனாலதான் நான் இக்பால் மாஸ்டரை விரும்பினன்' பாமிலா தன் கணவன் சாகிரின் முகத்தைப் பார்த்தவாறு கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்னை முதன் முதல் விரும்பி, சீதனம் எதுவுமே வேண்டாம் என்று உம்மா, வாப்பா எல்லாருக்கிட்டயும் நேரிலே சொல்லி, என்னை எதிர்பார்த்திருக்கிற சாலியை நான் ஒருபோதும் ஏமாற்ற விரும்பல்ல, மதினி'

எதிலும் மௌனம் சாதிக்கும் சரீனா இந்த விடயத்தில் திட்டவட்டமாக, சற்று உரத்த குரலில் எடுத்தெறிந்து பேசியது அவளது அண்ணன் சாகிருக்கும், மதினி பாமிலா வுக்கும் மனதுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

# [5]

இக்பால் ஆசிரியரை திருமணம் செய்யும்படி சரீனா விடம் அவள் மதினி பாமிலா விருப்பம் கேட்ட சம்பவத்தின் பிறகு, மதினி பாமிலாவின் வீட்டில் நிம்மதியாக இருக்கவோ அல்லது பாடசாலையில்தானும் மனநிம்மதி யாகப் படிப்பிக்கவோ சரீனாவால் முடியாதிருந்தது. தான் கொடுத்த முடிவு சரியானதாயினும், ஏனோ கடந்த இரண்டொரு நாட்களாக அவளது மனம் நிம்மதியற்றி ருந்தது.

மதினி பாமிலாவின் முகத்தைப் பார்க்கவோ, அவ ளோடு ஒழுங்காகக் கதைக்கவோ சரீனாவால் முடியா திருந்தது. சாலியிடம் இவ்விடயத்தைச் சொல்லியும், அவளது மனம் நிம்மதி பெறவில்லை அதனால், அன்று பாடசாலைக்கு அரைநாள் லீவு போட்டுவிட்டு, வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

அண்ணன், மதினி யாவருமே பாடசாலைக்குப் போவ தால் வழக்கமாக வீட்டுத் திறப்பை பக்கத்து வீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திமாவிடந்தான் ஒப்படைத்துவிட்டுப் போவது வழக்கம், மூவரும் வெவ்வேறு பாடசாலைகளில் படிப்பிப்ப தால் நேரத்தோடு வருபவா, சங்கடமின்றி வீட்டுக்குச் செல்லவே இந்த ஒழுங்கு.

பாத்திமா ஐம்பது வயது ஆகிவிட்ட ஒரு விதவைப் பெண், அவளது பிள்ளைகள் சின்னஞ்சிறு வயதினராக இருக்கும்போதே, அவளது கணவன் இறந்துவிட்டதால் அவள் எல்லோருடனும் அன்பாகவும். எல்லோருக்கும் உதவி யாகவும் இருந்தாள்.

வழக்கமாக திறப்பை கதவடியிலேயே கொடுத்துவிடும் பாத்திமா, அன்று சரீனாவை உள்ளே அழைத்து முக்கிய மான விஷயம் ஒன்றைப் பேசத் தொடங்கினாள்.

'மகள்... ஒரு விஷயம் தெரியுமோ? உங்கட மதினிட ஸ்கூள்ள படிப்பிக்கிற இக்பால் மாஸ்டர உங்களுக்கு கல்யாணம் கட்டிவைக்கத்தான் உங்கட நானாவும் மதினியும் விரும்பினாங்களாம். ஆனா... நீங்க என்னவோ காதல் எண்டு சொல்லிக்கிட்டு, சாலிய விரும்புறயளாம். முடிச்சா சாலியத்தான் முடிப்பேன் எண்டு, ஏதோ மதினிக்கு எடுத் தெறிந்து பேசிட்டீங்களாம்' பேசிக்கொண்டே சரீனாவின் தலையில் தனது கையைப் போட்டு தலை முடியொன்றி லிருந்த பேன் ஒன்றை இரு விரல்களால் உருவி எடுத்து, தனது பெருவிரல் நகங்களிரண்டுக்கும் இடையில் அதை வைத்து கொன்றாள் பாத்திமா.

பாத்திமா தன்னில் வைத்துள்ள அக்கறையை நினைதத் சரீனாவின் கண்கள் கலங்கின.

'சாரி ஹவுஸ் வைச்சிருக்கிற சாலிதான் என்னை முதன் முதல் விரும்பி மனம் திறந்து என்ட உம்மா, வாப்பா, மூத்த நானாவிடமெல்லாம் சொல்லி என்னை முடிக்கிறதா முடிவு எடுத்திருக்கார். நானும் அவரைத்தான் விரும்பி எனது மனதில இடம் கொடுத்திட்டன். இனி நான் அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பிடித் துரோகம் செய்யுற தாத்தா?' சரீனா கவலை யோடு பேசினாள்.

'நான் உங்களக் குறை சொல்லல்ல மகள், உங்கட மதினிக்கு சாலி உங்களோட கதைக்கிறதுக்காக இருந்து நிண்டு அவட வீட்டுக்கு வாறதும் பிடிக்கல்லையாம். உங்கட மதினி எண்ட கூட்டாளிதான். இருந்தாலும் அவட மனசில உள்ளத நான் உங்களுக்குச் சொல்லுறன். நீங்களும் என்ர மகள் மாதிரி. நீங்க இதுகள வெளியில சொல்லாம ஒவ்வொரு நாளும் ஸ்கூலுக்கு பஸ்சில போய் வாறது கஷ்டம் எண்டு சொல்லி, ஸ்கூலுக்குக்கிட்டவே ஒரு வீட்டைப் பார்த்து போடிங்காகிக் கொள்ளுங்க மகள்...' பாத்திமா அறிவுறுத்தினர்ள்.

இந்த விஷயங்கள் சாலிக்கு மாத்திரந்தான் தெரியும். வேறு யாருக்கும் தெரிய வர நியாயமில்லை. அதனால், பாத்திமா சொன்னவற்றை சந்தேகத்துக்கு இடமின்றி நம்ப வேண்டியிருந்தது சரீனாவுக்கு.

'மதினி சொல்லித்தான் இருப்பாள். சாலி வருவதும் அவளுக்குப் பிடிக்காததால்தான் கடந்த வாரமும் சாலி வந்திருந்தபோது தனக்குச் சுகமில்லையென்று படுத்திருக் கின்றாள்' என நினைத்துக் கொண்ட சரீனா,

ஓம் தாத்தா, ஸ்கூலுக்குப் பக்கத்திலேயே ஒரு வீட்டைப் பார்த்துக் கொண்டு ஒரு ரூம் எடுத்துக்கிட்டு இருக்கிறது எனக்கும் நல்லதுதான், பீ ஏ. பைனல் சோதினை யும் எடுக்கவேணும் படிக்கிறதுக்கும் வசதியாயிருக்கும்' என்றாள்.

'மகள், அல்லாவுக்காக நான் சொன்னதெண்டு சொல் லாம... மனசில உள்ள ஒன்றையுமே வெளிக்காட்டாம... ஸ்கூலுக்கு ஒவ்வொரு நாளும் பஸ்சில போற வாறது கஷ்டம் எண்டு சொல்லித்தான் வீடு மாறவேணும்' என்று இடைமறித்துச் சொன்ன பாத்திமா; இந்த இரகசியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தக்கூடாது என்று சரீனாவிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்டாள்.

தனது நிலைமையையும், பாடசாலைக்குப் பக்கத்தில் ஒரு வீட்டில் 'போடிங்'காக இருக்கவேண்டியதன் அவசியத்தையும் விளக்கி, அதற்கு அனுமதி கேட்டு ஒரு கடிதத்தை பாத்திமாவின் வீட்டிலேயே வைத்து தந்தையாரின் முகவரிக்கு எழுதி, அதனை தபாலில் சேர்ப்பிப்பதற்காக பேராதனை தபால் அலுவலகத்தை நோக்கிச் செல்ல ஆயத்தமானாள் சரீனா.

'மகள்... நான் சொன்ன எதையும் மதினிக்கிட்ட கேட்டிடாதையுங்க...' என்று தன் கண்களை அகலத்திறந்து மீண்டும் தான் சொன்ன இரகசியத்திற்கு உரமூட்டினாள் பாத்திமா.

'உதவி செய்த உங்கள நான் உபத்திரவத்துக்குள்ளாக்க மாட்டன் தாத்தா...' என்று நன்றியுடன் பார்த்த சரீனா, தபால் அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

'யாரும் நம்பிக்கையாகவும் நேர்மையாகவும் நடந்தால், இறைவனும் அவர்களை ஒருபோதும் கஷ்டத்துக்குள்ளாக்க மாட்டான். அவர்களுக்கு நடக்கப்போகும் சதிகளைக்கூட, இறைவன் யார் மூலமாவது காட்டிக் கொடுத்துவிடுவான். நானும் யாருக்கும் துரோகம் செய்தவளில்லையே அதனால் தான், என்ர மதினியின் மனதில உள்ளதை பாத்திமாத் தாத்தா மூலம் எனக்கு காண்பித்துவிட்டான்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டவள் தனது கையிலிருந்த கடிதத்தை தபாற்பெட்டிக்குள் போடவும், அன்றைய தபாலுக்கு அவற்றை தபாற் சேவகன் ஒருவன் எடுத்துச் செல்லவும் சரியாகவிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [6]

சரீனா தான் படிப்பிக்கும் பாடசாலைக்கும் அருகாமையிலேயே ஒரு வீட்டில் அறையொன்றை எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள்.

அது ஒரு மாடிவீடு. அன்வர் ஹாஜியார் என்ற ஒரு வசதிபடைத்த முதலாளியின் வீடுதான் அது. அவர்களின் மகள் சரீனாவிடம் படிப்பதால், இப்படி ஒரு வசதியான இடம் அவளுக்கு வாய்ப்பாகக் கிடைத்திருந்தது.

சரீனாவுக்கு மேல் மாடியில்தான் ஒரு 'ரூம்' கொடுத்திருந்தார்கள் அதில் நின்று யன்னலினு டாகப் பார்த்தால், வீட்டிற்குப் பக்கத்தில் மகாவலி நதியின் கிளையொன்றை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் நீரோடை தெரியும். இரவில் அதன் 'சல சல'வென்ற நீரோட்டத்தின் சப்தம் நன்கு கேட்கும். இவையாவும் அவள் மனதுக்கு அமைதியை அளித்துக் கொண்டிருந்தன.

அவ்வீட்டில் வேலைக்கு ஒரு சமையற்காரியும் இருந்ததால், சமையல் வேலைகளிலும் சரீனா பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அது அவள் எதிர்நோக்கிக் கொண்டிருந்த பி ஏ. இறுதிப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய வசதியாயிருந்தது.

அன்வர் ஹாஜியாரும் ஒரு வியாபாரி என்பதால் சாலியை அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. சரீனா இங்கு வந்த பிறகு, சாலியும் ஹாஜியாரும் நல்ல நண்பர்களாகி விட்டனர். அவர்களுக்கும் சாலி—சரீனா காதல் விஷயம் தெரிந்துவிட்டது.

கண்டியில் அமைந்திருந்த தனது கடையான 'மபாஸ் ஜுவலரி'யில் இருந்து இரவு வழக்கம்போல வீடு வந்திருந்த அன்வர் ஹாஜியார் அன்று என்றுமில்லாதவாறு தனது மனைவியோடு ஏதோ 'குசு குசு'ப்பது சரீனாவுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தது. இருந்தாலும், அவள் அதை அவ்வளவு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை.

இரவு உணவுக்குப் பிறகு அன்வர் ஹாஜியாரின் மனைவி தான் பேச்சை ஆரம்பித்தாள்.

'பிஸ்னஸ் எண்டால் அப்பிடித்தான். அதுக்குத்தான் அரசாங்க உத்தியோகம் நல்லம் எண்டு சொல்லுறது' கவலையோடு பேசினாள் ஹாஜியாரின் மனைவி.

ஒன்றுமே புரியாத சரீனா, ஹாஜியாரினதும் அவரின் மனைவியினதும் முகங்களைப் பார்த்தாள். ஹாஜியாருக்கு இன்று வியாபாரத்தில் ஏதும் ஒரு பாரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம் என்றுதான் யூகித்தாள் சரீனா.

பணக்கஷ்டத்தின் காரணமாக தம்மிடமுள்ள நகைகளை விற்பவர்கள், பணம் தேவைக்கு அதிகமாக இருப்பதன் காரணமாக தமது நகைகளை புதுப்புது மோஸ்தர்களில் செய்வதற்காக அவற்றை விற்பவர்கள் என்று, எல்லாரும் தமது தங்க நகைகளை அன்வர் ஹாஜியாரின் கடைக்குத்தான் கொடுப்பார்கள். அவர்கள் மட்டுமல்ல, நாட்டுப்புறங்களுக்கு விலை குறைந்த பிளாஸ்ட்டிக், அலுமினியப் பாத்திரங்களை சுமந்து வீடு வீடாகச் சென்று 'பழைய தங்கம், பொன், வெள்ளி, பிடவைகள் இருக்கா?' என்று கேட்கும்போது; ஏமாறும் பெண்களிடம் அவற்றைக் கொடுத்து பெறுமதிமிக்க பழைய சிறிய நகைகளையும். சாரிகளையும் வாங்கும் 'பறன கோட்' வியாபாரிகளும் இங்குதான் அவற்றை விற்பார்கள்.

பழைய இற்றுப்போன தமது கூறைச் சேலைகளை அவ்வியாபாரிகளிடம் கொடுத்து ஐம்பது ரூபா பெறுமதியான ஒரு பிளாஸ்டிக் வாளியையோ, ஒரு அலுமினியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்தையோ வாங்கி, ஒரு சாதனையை நிலைநாட்டி விட்டதாக பெண்கள் நினைத்துக் கொள்ளுவார்கள். ஆனால், அவர்கள் விற்ற சாரியை நெருப்பிலே எரித்துப் பார்த்தால் அவற்றிலே ஐநூறு ரூபாவுக்கும் கூடிய பெறுமதி யான வெள்ளி இருப்பது அந்த வியாபாரிகளுக்குத்தான் தெரியும்.

இப்படியான பழைய நகைகளை அன்வர் ஹாஜியார் வாங்கும்போது, அவற்றை உரை கல்லில் உராய்த்துப் பார்த்துத்தான் வாங்குவார். இருந்தாலும் சில பொற் கொல்லர்களின் திறமை, கபடம் காரணமாக ஏற்கனவே தங்க நகைகளின் சில பகுதிகளில் தங்கத்துடன் கலக்கப் பட்ட ஏனைய உலோகங்கள் அதிகமாக இருப்பதை கண்டுபிடிப்பது கஷ்டமாகிவிடும், அவற்றையெல்லாம் புடம் போட்ட பின்னர்தான். உண்மை நிலைமை விளங்கும். ஆனாலும் இந்த பழைய தங்கம், வெள்ளி வியாபாரத்தில் பெரிய இலாபம் பெறுவது அன்வர் ஹாஜியாருக்கு கைவந்த கலை. இருந்தாலும் கலப்பு நகைகளை விற்று ஹாஜியாரை ஏமாற்றிவிடும் வியாபாரிகளும் இருக்கத்தான் செய்தார்கள்.

'பாவம்... சாலி... இங்கம்டெக்ஸ் டிபார்ட்மெண்டால வந்து அவர்ட கடையச் சீல் வெச்சிட்டாங்களாம். சாலிர வாப்பா முந்தி ஒரு இலட்சம் ரூபாமட்டில் வருமான வரி கட்டவேண்டி இருந்திச்சாம். அதை அறவிடுறதுக்காகத் தான், கடையச் சுவீகரிச்சிட்டாங்களாம்' அன்வர் ஹாஜியார் மிகவும் கவலையோடு சொன்னார்.

இதைக் கேட்ட சரீனாவுக்கு நெஞ்சுக்குள் திக்கென்றது. அவளது முகம் கவலையால் கருத்துக் கொண்டு வந்தது. அதுக்கென்ன செய்யலாம் டீச்சர்... அதுக்காகத்தான் அரசாங்க உத்தியோகம் நல்லமெண்டு சொல்லுற' ஹாஜியாரின் மனைவி அபிப்பிராயம் தெரிவித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ர மதினிர வேலையாகத்தான் இருக்கும் இது. எனக்கு ஒரு ஸ்கூல் மாஸ்ட்டர கலியாணம் பேசினா அவ. நான் அதுக்கு விருப்பப்படல்ல, நான் சாலியையே விரும்பினன், அதனாலதான். சாலியை நஷ்டப்பட வைக்கிற துக்காக அவங்க பிட்டிசன் போட்டு இப்பிடிச் செஞ்சிருப் பாங்க' சரீனாவின் அபிப்பிராயம் இது.

'களவு எடுத்தவனுக்கு ஒரு நரகமாம். களவு குடுத்தவனுக்கு ஏழு நரகமாம். அதனால நீங்க மதினியைச் சந்தேகிக்காதைங்க. வரியை அறவிடுறதுக்கு அரசாங்கத் துக்கு சட்டம் இருக்கு. இந்தக் காலம் பிஸ்னஸ் செய்யுறதே கஷ்டம், அதுதான் டீச்சர்... அரசாங்க உத்தியோகம் போல எதுவும் வாய்க்காது...'' என்று சொன்னவாறு சரீனாவின் முகத்தைப் பார்த்தார்கள் ஹாஜியாரும், அவரின் மனைவியும்,

சரீனாவின் அபிப்பிராயத்தை அறியும் ஆவல் அவர் களின் முகத்தில் பிரதிபலித்தது.

ஆனால் சரீனா அமைதியாக இருந்து யோசித்துக் கொண்டிருந்தாள். 'டீ. வீ.' யில் 'ரூபவாஹினி' சேவையின் ஒளிபரப்பு அன்றைய தினத்துக்கு முற்றுப் பெறுவதை அறிவிக்கும் அறிவித்தல் மும்மொழிகளிலும் பெண்களின் இனிய குரலில் ஒலித்துக் கொண்டிருந்தமை நேரம் இரவு பத்தரையைத் தாண்டிவிட்டது என்பதை அவர்களுக்கு ஞாபகமூட்டியது.

ஹாஜியாரின் மனைவியுடன் விடைபெற்றுக்கொண்டு படுக்கைக்குச் சென்றாள் சரீனா. தூக்கம் அவளை அரவணைக்கமறுத்தது. பலத்த சிந்தனையோடு, கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [7]

வருமானவரித் திணைக்களத்தால் காதலன் சாலியின் கடை சுவீகரிக்கப்பட்ட செய்தியை சரீனா அறிந்ததிலிருந்து தொடர்ந்து வந்த மூன்று வாரமாக சனி, ஞாயிறுகளில் வழக்கம் போல சாலி வராதது சரீனாவுக்கு மிகவும் கவலையளித்தது.

கடை சுவீகரிக்கப்பட்டு 'சீல்' வைக்கப்பட்டுள்ளதால் கடைக்குப் போகவும் முடியாது, சாலியின் வீட்டுக்குப் போகவும் முடியாது அவள் மனம் கலங்கினாள் தான் தங்கியிருந்த வீட்டு ஹாஜியாரின் மனைவியுடன் சாலி வராமை பற்றிக் கூறி தற்காலிக மன ஆறுதலடைவதைத் தவிர அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை.

பாடசாலையில் அவளால் நிம்மதியாகப் படிப்பிக்கவும் முடியவில்லை. இன்னும் இரண்டொரு கிழமைகளில் பீ.ஏ. இறுதிப் பரீட்சைக்கு தோற்றவேண்டியிருந்தது.

பரீட்சைக்குப் படிப்பதற்காக இரண்டு வாரங்கள் லீவு பெறுவது பற்றிக் கதைப்பதற்காக அதிபரின் அறைக்குள் சென்ற அவளது கண்கள், தனிப்பட்ட கடிதங்கள் தொங்க விடப்படும் இடத்தினை நோக்கின.

ஆமாம், சாலியின் கையெழுத்தில் முகவரியிடப் பட்டிருந்த அக்கடிதத்தைக் கண்டதும் அவளுக்கு மனதில் ஒரு மகிழ்ச்சி. கடிதத்தை எடுத்துத் தனது கையிலிருந்த பாடப் புத்தகத்துக்குள் வைத்த சரீனா, அதிபரோடு கதைக்கும் நோக்கத்தைக் கைவிட்டு, ஆசிரியைகள் இளைப் பாறும் அறையை நோக்கிப் போனாள்.

அந்தப் பாடவேளை அவளுக்கு மாத்திரம் ஒய்வா யிருந்தத ால், ஓய்வாகவே இருந்து கடிதத்தையும் படிக்கத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எலுகொட,
பேராதனை.
87-06-25

அன்புள்ள சரீனாவுக்கு,

கடந்த இரண்டொரு வாரமாக நான் அங்கு உங்களைச் சந்திக்க வரவில்லை. வருவதற்குரிய தகுதி எனக்கில்லை. நான் நடாத்திவந்த எனது தகப்பனாரின் வியாபாரத்தை வரிப் பாக்கி காரணமாக வருமானவரித்திணைக்களத்தினர் சுவீகரித்துக் கொண்டனர்.

இந்த நிலையில் நான் ஒரு தொழிலோ, முதலோ இல்லாதவனாகி விட்டேன். உங்களைப்போல ஒரு, மாதச் சம்பளம் எடுப்பவனாவும் நான் இல்லை.

எனவே, நீங்கள் என்னை மன்னித்து மறந்துவிடுவதே நல்லது என நினைக்கிறேன். உங்கள் எதிர்காலம், நலமே அமைய வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இப்படிக்கு,
சாலி.

கடிதத்தை படித்து முடித்த அவள், சிந்தனை வயப் பட்டாள்.

'காதல் மிகவும் உயர்வானது, மேன்மையானது. இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமேயில்லை என்று எமது முன்னோர்களே அமுத வாக்களித்துள்ளார்கள். ஏன் இப்படி சாலி காதலோடு தொழிலையும் பணத்தையும் அந்தஸ்தை யும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும்? நான் அவரது உயரிய குணங்களையும் நடத்தையையும் விரும்பினேனே யன்றி, பணத்தையும் தொழிலையும் விரும்பவில்லையே. அப்படி விரும்பியிருந்தால்தான், இக்பால் மாஸ்டர் என்னை விருப்பம் கேட்டு வந்தபோது அவரை விரும்பியிருக்கலாம் தானே. சே... இதுகூடப் புரியாதவராக சாலி இப்படியெல் லாம் எழுதியிருக்கிறாரே...'

'என்னடி சரீனா... அடுத்த பாடத்துக்கு மணியடிச்சது உனக்குக் கேட்கல்லியா, பாடத்துக்குப் போகவில்லையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டுக்கொண்டு வந்த அவளது சக ஆசிரியையான நண்பியின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தாள்.

பாடசாலையிலிருந்து தங்குமிடத்துக்கு வந்த சரீனா, தனது அறையில் அப்படியே கட்டிலில் படுத்துக் கிடந்தாள்.

'டீச்சர்... டீச்சர்... ஏன் சாப்பிடாம ஒரு மாதிரியாப் படுக்கிறீங்க?' என்று கேட்டவாறே அறைக்குள் வந்தாள் ஹாஜியாரின் மனைவி.

கலைந்து கிடந்த கூந்தலைச் சரிசெய்து கொண்டவளாக எழுந்த சரீனா, தனது கைப்பைக்குள்ளிருந்த டயறியை எடுத்தாள். அதற்குள்ளிருந்த் சாலி அனுப்பிய கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படிக்கும்படி கொடுத்தாள், ஹாஜியாரின் மனைவியிடம்.

''இஞ்ச பாருங்களே... நான் சாலியைப் பணத்துக்காகவோ சொத்துக்காகவோ விரும்பவில்லை. அவருடைய குணத்துக்காக, ஏதோ அவர் மேல் ஓர் இனமறியாத அன்பு ஏற்பட்டுது. அவரும் என் மீது காட்டின அன்பையும் உண்மையாகவே நினைத்தன். ஆனால்... இப்போ ஏதோ இப்பிடியெல்லாம் உளறித் தள்ளியிருக்கிறார். நீங்களாவது ஹாஜியாருக்கிட்ட சொல்லி, அவர வரச் சொல்லுங்க...'' சரீனா கவலையோடு உதவி வேண்டி நின்றாள்.

''இதுக்காக சாப்பிடாம படுத்து என்ன செய்யிற... முதலில வந்து சாப்பிடுங்க. நான் ஹாஜியாருக்கிட்ட சொல்லி, அவர் மூலம் சாலியை இங்கு அழைப்பிப்போம். பயப்பிடாதைங்க டீச்சர்'' ஹாஜியாரின் மனைவியின் தேற்றுதலில், சற்றுத் திருப்தி கண்ட சரீனா சாப்பிட்டு விட்டு சாலிக்கு ஒரு கடிதமும் எழுதினாள்.

அன்புள்ளவருக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. உங்கள் வருகையை எதிர் பார்த்து ஏமாந்திருந்த எனக்கு, அக்கடிதம் கிடைத்ததும் எரியும் தீயில் எண்ணெய் வார்த்தது போலாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உங்கள் பணத்தினையோ, வியாபாரத்தையோ விரும்பவில்லை. உங்கள் குணத்தையும் ஒழுக்கத்தையும் நடத்தையையும்தான் விரும்பினேன். பணம் இன்று எம்மிடம் இருக்கும். நாளை இன்னொருவரின் கைக்கு மாறும் என்பதில் நம்பிக்கையுடையவள் நான்.

உங்களுக்கு ஏற்பட்ட இந்நிலையை எண்ணி, நான் மிகவும் கவலைப்படுகிறேன். ஆனால், நான் அதைப் பொருட்படுத்தவில்லை. நான் உங்கள் மீது வைத்துள்ள அன்பை இறைவனைத் தவிர வேறு எந்த சக்தியாலும் மாற்ற முடியாது. நீங்களும் அதே மாதிரி நடப்பீர்கள் என்றே நினைக்கிறேன். எனவே, எனது நம்பிக்கைக்குத் துரோகம் செய்யமாட்டீர்கள் என நம்புகிறேன். உங்கள் வருகையை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
என்றும் உங்கள் சரீனா.

கடிதத்தை எழுதி முடித்த சரீனாவுக்கு எங்கோ, எப்போதோ படித்த ஒரு வசனம் ஞாபகத்திற்கு வந்தது. உடனே அதையும் தான் எழுதிய கடிதத்திற்கு அடியில் எழுதினாள்.

பி.கு.—காதல் ஒரு முறைதான் மலரும். அந்த மலர் வாடி வதங்கிக் கீழே விழுந்தால், மீண்டும் மலரப் போவது மில்லை. மணம் வீசுவதுமில்லை.

மீண்டும் ஒரு தடவை கடிதத்தை வாசித்துப் பார்த்தாள்.

ஹாஜியார் வீட்டு எடுபிடி வேலைக்கான பையன் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு தபாற் கந்தோரை நோக்கி விரைந்து கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [8]

இரண்டு மாதங்களுக்குப் பிறகு சாலியைக் கண்டது சரீனாவுக்கு, ஏதோ இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு அவனைச் சந்திப்பதுபோல் இருந்தது. தனது கடிதமும், ஹாஜியாரின் அறிவுரைகளுந்தான், சாலியை அவன் அடைந்திருந்த தாழ்வுச் சிக்கலில் இருந்து விடுவித்திருக் கின்றன என்று புரிந்துகொண்டாள், சரீனா.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஹாஜியாரும் கடைக்குப் போகாமல் வீட்டில்தான் இருந்தார். அன்று, விசேஷமாக, சாலிக்கு பகல் சாப்பாட்டுக்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சரீனாவும், பீ.ஏ, இறுதிப் பரீட்சையை இரண்டொரு நாட்களுக்கு முன்னர்தான் எழுதி முடித்திருந்ததால் மிகவும் மகிழ்ச்சியாயிருந்தாள். பரீட்சையொன்றை எதிர்நோக் குவது, தலையில் ஒரு பாரத்தை சுமந்து கொண்டிருப்பது போல்தான். அதுதான், பரீட்சை முடிந்ததும் ஒரு தலைச் சுமை குறைந்த மாதிரி திருப்தி பரீட்சை எழுதி முடித்தவர் களுக்கு ஏற்படுகின்றது.

''காதல் ஒரு முறைதான் மலருமாம். அந்த மலர் வாடி வதங்கிக் கீழே விழுந்தால் மீண்டும் மலரவும் மாட்டாதாம். மணம் வீசவும் மாட்டாதாம்... ப்பூ...'' சரீனா எழுதிய கடிதத்தில் இருந்த இந்த வசனங்களைச் சொல்லி சரீனா வைக் கேலி செய்தான், சாலி

'நான் அந்த வசனங்களைப் பூரணமாக நம்புறன். நிச்சயமாக என்னைப் பொறுத்தவரையில அப்பிடித்தான். ஆனால்... நீங்க அந்த வசனத்துக்கு அப்பாற்பட்டவர்தான்' என்று சொன்ன சரீனாவை, வினாக்குறியுடன் பார்த்த சாலியைப் பார்த்து மீண்டும் கதைக்கத் தொடங்கினாள்.

அவர்கள் இருவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வைத்திய பீடத்தில் ஒரே 'பெட்ச்'ஜில் படித்துக் கொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தார்கள். ஆங்கில மொழி மூலம் நடாத்தப்பட்ட கல்விப் போதனை அவர்களை இன, மொழி, மத பேதங்களி லிருந்தும் விடுவித்து இணைத்து வைத்தது.

அவள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உயர் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் இந்துப்பெண். அவன் கண்டிப் பகுதியைச் சேர்ந்த ஒரு 'எஸ்டேட்' உரிமையாளரின் மகன். ஒரு சிங்கள பௌத்தன். இருவருமே ஒரே வயதையொத்தவர்கள் வசதிபடைத்தவர்கள், அழகானவர்கள். இருவருமே திறமை சாலிகளாகவுமிருந்தார்கள். அவர்களின் 'பெட்ச்'ஜிலே இருவருந்தான் படிப்பிலே முதல் இடத்தை வகித்தார்கள்.

இருவரும், அவர்களது ஐந்து வருட பல்கலைக்கழக வாழ்க்கையை படிப்புக்கு எவ்வளவு பிரயோசனப்படுத்திக் கொண்டார்களோ, அதேபோன்று ஒருவரையொருவர் காதலிப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டார்கள், அதற்காக அவர்கள் பல்கலைக்கழக வளாக ஒதுக்குப்புறங்களிலும். சினிமாக் கொட்டகைகளிலும், பூந்தோட்டங்களிலும் அலைந்து திரியவில்லை. ஒருவரையொருவர், மனதால் விரும்பினார்கள்.

அவர்களின் ஐந்து வருடப் படிப்பு நிறைவடைந்ததும், பரீட்சைப் பெறுபேற்றினை எதிர்பார்த்து அவள் யாழ்ப் பாணத்திலும், அவன் கண்டியில் அவனது தந்தையின் 'எஸ்டேட்'டிலும் காலத்தைக் கழித்தனர்.

இதற்கிடையில், லண்டனில் இருந்த அவளது உறவின னான டாக்டர் ஒருவரை அவளுக்குத் திருமணம் செய்து வைக்க அவளது வசதிபடைத்த பெற்றோர் முனைந்தனர். அவள் அதற்கு மறுப்புத் தெரிவித்து அவளது காதலை பெற்றோருக்கு வெளிப்படுத்தினாள்.

பெற்றோர்கள் அவளை விடவில்லை. அவளின் காதலுக்கு முழு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவளது காதலுக்கு இடமளித்தால் தமது மானம், மரியாதையெல் லாம் போய்விடும் என்று கூக்குரலிட்டனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் விட்டுக் கொடுக்கவில்லை. உண்ணாது, குடிக்காது உண்ணாவிரதம் அனுஷ்டித்தாள். நாட்கள் சில நகர்ந்தன. பெற்றோரின் மனம் இழகவேயில்லை. இங்கு 'பெற்ற மனம் கல்லு' ஆகிவிட்டது.

விளைவு, அவள் நினைவிழந்தாள். டாக்டர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்களின் அறிவுரை, அவள் காதலுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்பதாய் இருந்தது.

ஆனால் அவள் எந்த ஆகாரத்தையும், மருந்தையும் வாயினுள் ஏற்கவில்லை. அவளின் காதலனை உடன் அழைப்பித்தாக வேண்டும். அப்போதுதான், அவளது உயிரைக் காப்பாற்றலாம், இப்போதான் பெற்ற மனம் பித்தாகத் தொடங்கியது.

ஆனால், ஏற்கனவே அவர்களது 'பெட்ச் மேற்' ஆகிய யாழ்ப்பாண நண்பியொருத்தி மூலம் விடயத்தை அறிந்த அவளது சிங்களக் காதலன், யாழ்ப்பாணம் புறப்பட்டு வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும், நினைவிழந்து கிடந்த அவளது காதலி புன்னகை ஒன்றை உதிர்த்தாள். அவனை தன்னருகே வரும்படி சைகை செய்தாள். அவளது பெற்றோரும், உறவினரும் அவள் உயிர் தப்புவதற்காக இப்போது எதை யும் இழக்கத் தயாராகவிருந்தார்கள். அவனும் அவனது காதலி இருந்த கட்டிலை அண்மினான். அதில் அமரும்படி அவள் சைகை செய்தாள். அவனும் அமர்ந்தான். அவனது மடியில் தனது தலையைத் தூக்கி வைக்கும்படி சைகை செய்தாள். அப்படியே செய்தார்கள்.

அவளது உயிர், அவளது காதலனின் மடியில் பிரிந்தது.

அவளது காதலன் இப்போது பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருக்கின்றார். ஐம்பது வயதாகியும் அவர் இன்னுமே திருமணம் செய்யாத ஒரு பிரம்மச்சாரியாகவே இருக்கின்றார். தனது காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேறாமையால், அதற்காக தனது வாழ்வையே அர்ப்பணித்து விட்டார்.

இது ஒரு கற்பனைக் கதையல்ல, இருபத்தைந்து வருடங் களுக்கு முன்பு நடந்த ஒரு உண்மைச் சம்பவம்

சரீனா பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தனது நண்பிகளின் மூலம் அறிந்த இந்த உண்மைக் கதையை, சாலிக்குச் சொல்லி முடித்தாள்.

''நீங்கள் என்றால் இப்படிச் செய்ய மாட்டீர்கள். உங்கட உம்மாவும் வாப்பாவும் வேண்டாம் என்று சொன் னால் என்னை மறந்து வேறு ஒரு பெண்ணை முடித்துக் கொள்ளுவீர்கள்'' சொல்லிவிட்டுச் சாலியின் முகத்தைப் பார்த்தாள் சரீனா.

''அவள் ஒரு பயித்தியக்காரி, காதலுக்காக உயிரையே விட்டிருக்கிறாள். அதற்காக இன்னும் கலியாணம் முடிக் காமல் இருக்கின்ற அவரும் ஒரு பயித்தியக்காரன்தான்'' சாலியின் இந்த வார்த்தைகள் சரீனாவின் முகத்தை கொஞ்சம் வாட்டத்தான் செய்தது.

'பயப்பிடாதையுங்க சரீனா, என்ட உம்மா, வாப்பா எதுவும் சொல்லமாட்டாங்க. எனது முடிவுதான் அவங்கட முடிவும். நான் உங்களைத்தான் முடிப்பன்...''

ஹாஜியார் குடும்பத்தினரின் பகல் உணவுக்கான அழைப்பு, அவர்களின் இன்பகரமான சூழ்நிலையைக் குலைத்தது.

# [9]

பாடசாலை விடுமுறை விட்டிருந்தது. கம்பளையிலி ருந்து காலை ஆறரை மணிக்குப் புறப்படும் புகையிரதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தறைக்குப் போவதுதான் சரீனாவுக்கு வழக்கம். கெலிஓயாப் புகையிரத நிலையத்தில் ஏறிச்சென்று பேராதனைச் சந்தி புகையிரத நிலையத்தில் இறங்க வேண்டும். கண்டியிலிருந்து வரும் கொழும்புப் புகையிரதத்தில் பின்னர் ஏறி மருதானைக்குச் சென்று, மருதானையிலிருந்து புறப்படும் 'றுகுணு குமாரி' புகையிரதத்தில் நேராக மாத்தறை சென்றுவிடலாம். இந்தப் பிரயாணம் பாதுகாப்பு என்பதால் சரீனா தனிமையாகவே மாத்தறை செல்லப் பழகியிருந்தாள்.

வழக்கமாக விடுமுறைக்குப் போகும்போது சாலி அதிகாலையிலேயே வந்து சரீனாவின் உடுப்புப் பை, புத்தகங்களை தனது பைசிக்கிளில் வைத்து கெலிஓயா புகையிரத நிலையம் வரை கொண்டுவந்து கொடுப்பான்.

அன்று காலை ஆறு மணி. சரீனா பாதையின் ஓரமாக கெலிஓயா புகையிரத நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் பைசிக்களில் சரீனாவின் ட்ரவலிங் பேக்கை பைசிக்களின் ஹேண்டலில் வைத்து ஒரு கையால் பிடித்துக்கொண்டு, பைசிக்கிளில் மெதுவாக ஊர்ந்துகொண்டிருந்தான் சாலி.

அதிகாலைக் குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. அதன் குளிரைத் தாங்காத சரீனா சேலையின் முந்தானையால் தனது உடம்பைப் போர்த்திக் கொண்டவளாக நடந்துகொண்டிருந்தாள்.

ஒரு மாத பாடசாலை விடுமுறையில் அவள் போவதால், சாலிக்கும் அவளோடு நிறையக் கதைக்கவேண்டியிருந்தது. அதனால், அவர்கள் தம்மை மறந்து கதைத்துக்கொண்டு கெலிஓயா நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

'தடார்' என்ற ஓசை கேட்ட அக்கணமே, சரீனா திரும்பிப் பார்த்தாள். அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு லொறி சாலியை மோதியிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சாலி சைக்கிளுடன் சரீனாவின் மீது வீசுண்டான்.

சரீனாவுக்கு சுய நினைவு வந்து, கண் விழித்துப் பார்த்தபோது கண்டி பெரியாஸ்பத்திரியின் 'வாட்' ஒன்றில் கட்டிலொன்றின் மீது படுத்திருந்தாள். அவளைச் சுற்றி அவளது மூத்த அண்ணன், இளைய அண்ணன் சாகிர், அவர் மனைவி பாமிலா, தாய், தந்தை எல்லோரும் நின்றிருந்தார்கள்.

''நல்ல காலம், அல்லா காப்பாத்திட்டான். எந்தக் காயமும் இல்லாம சரீனா தப்பிட்டா'' பாமிலாவின் பேச்சு அவ்விடத்தில் நிலவிய அமைதியைக் குலைத்தது.

'என்ன மகள், ஏதும் உள்ளுக்குள் நோவுகள் இருக்கா?' சரீனாவின் நெற்றியிலிருந்து தலையை தனது கையால் வருடியவாறு, கேட்டாள் சரீனாவின் தாய்.

சரீனாவின் இரு கண்களின் ஓரங்களிலிருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருக்க, 'எதுவுமே இல்லை' என்று சொல்லு மாப்போல தலையசைத்தாள்.

சங்கடங்களும் கஷ்டங்களும் வரும்போது, தாம் பகைவர்களாக நினைப்பவர்களையும் நண்பர்களாக நினைத்து உதவி கேட்க வேண்டிய சந்தர்ப்பங்கள் யாருக்கும் ஏற்படுவது இயல்புதான்.

சரீனாவின் அண்ணன்மார் இருவரும் அவ்விடத்தை விட்டு சரீனாவிற்கு சாப்பிட ஏதும் வாங்கி வருவதற்காக வெளியே சென்றிருந்தனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 'மதினி! சாலி இப்போ எங்கே? அவரின் நிலைமை எப்படியோ தெரியாது?' என்று பாமிலாவை வினவினாள்.

' அவர பன்னிரெண்டாம் வாட்டில வெச்சிருக்காம். அவர்ட கால் ஒன்று முறிஞ்சிருக்குதாம் மதினி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ற அல்லாஹ்! ஏன் என்னை இப்படிச் சோதிச் சாய்'' முன்னந்தலையில் கையை வைத்தவாறு, அழத் தொடங்கினாள் சரீனா.

பாமிலாவும் சரீனாவின் பெற்றோரும் அவளைத் தேற்றிக்கொண்டிருக்கும்போது, வெளியே சென்றிருந்த சரீனாவின் அண்ணன்மார் இருவரும் வந்து சேர்ந்தனர்.

''ஏன் சரீனா அழுகிறாள்?'' இருவரும் ஒரேயடியாகக் கேட்டுக்கொண்டு வந்தனர்.

''சாலியின் கால் முறிஞ்சதை அறிஞ்சுதான் அழுகிறா'' பாமிலா சொன்னாள்.

''அதுக்கு ஏன் அழவேணும், ஊரெல்லாம் இப்போ நாறுது. சாலிக்கு ஒரு காலை அடிப்படியே களட்ட வேணுமாம். இனி அந்தத் தொடர்பெல்லாம் சரிப்படாது'' உரத்த குரலில் மூத்த. அண்ணன் கண்டிப்போடு கூறினான்.

அவ்விடத்தில் சற்று நேரம் அமைதி நிலவியது.

பாமிலாவும், சரீனாவின் பெற்றோரும் இருபக்கத் திலும் அவளின் தோள் புறமாக, தமது கையால் பிடித்துக் கொண்டு நின்றார்கள். அவளின் அண்ணன்மார், அவ்விடத் தில் நிற்கப் பிடிக்காதவர்கள் போல மீண்டும் வெளியே போனார்கள்.

நோயாளிகளைப் பார்வையிடும் நேரம் முடிந்து விட்டதை அறிவிக்கும் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. நோயாளர்களைப் பார்க்க வந்தவர்கள், கொஞ்சம் கொஞ்ச மாக வெளியேறிக்கொண்டிருந்தார்கள். அதேபோல சரீனா வின் பெற்றோரும் மதினி பாமிலாவும் வெளியேறிகொண் டிருந்தனர். சரீனாவின் அண்ணன்மார் தூரத்தில் நின்று கொண்டிருந்ததைக் கண்ட சரீனா, தனது கட்டிலில் சாய்ந்துகொண்டாள்.

'இந்த எக்சிடண்டில என்னுடைய ஒரு கால் முறிந்து, சாலிக்கு ஏற்பட்டிருக்கிற அதே நிலைமை எனக்கு வந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலி என்னைத் திருமணம் செய்ய மறுத்து... வாக்கு மாறினால் எனக்கும் என்னுடைய உம்மா, வாப்பாவுக்கும் நானாமாருக்கும் எப்படியிருக்கும்? அவரை எல்லோருமே விரும்பி, வாயால் வாக்குறுதி அளித்துவிட்டு, இப்போ அதே வாயால அவரை மறக்கும்படி சொல்லுறாங்களே, என்னுடைய நானாமார். இது மனச்சாட்சிக்கே நியாயமானதா?'

இப்படிச் சிந்தித்தவளாகவே கட்டிலில் படுத்துக் கிடந்தாள், சரீனா.

# [10]

சாலியின் ஒரு கால் முறிந்துள்ளதாகவும், சத்திர சிகிச்சை மூலம் இக்காலை அகற்றவேண்டியுள்ளதாகவும். அதனால் அவனை திருமணம் செய்யும் எண்ணத்தைக் கைவிடும்படியும் தனது அண்ணன்மார் கூறிச்சென்றதிலிருந்து, சரீனாவுக்கு இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. பலத்த சிந்தனைகளின் மத்தியில் ஆடாமல், அசையாமல் கட்டிலில் சாய்ந்தவளாகவே அன்றைய இரவைப் போக்கினாள்.

கழுத்திலே 'ஸ்டெதஸ்கோப்'பினைத் தொங்கவிட்டுக்கொண்டு வெள்ளை நிறக் 'கோட்' அணிந்து ஒவ்வொரு நோயாளியையும் மிகக் கவனமாக பரிசோதித்துக்கொண்டு வந்தனர், சரீனா அனுமதிக்கப்பட்டிருந்த 'வாட்'டுக்குப் பொறுப்பான டாக்டர்கள்

அவர்கள் அணிந்துள்ள 'கோட்'டின் நிறம் போன்றுதான் அவர்களின் மனதும் எத்துணை வெண்மையானது. நோளிகளை தமது உள்ளத்தாலும் உறுப்பாலும் தொட்டு அவர்களை தங்களால் முடிந்தளவு சுகப்படுத்த முனையும் அவர்கள் செய்யும் சேவை உண்மையில் ஒரு தன்னலமற்ற சேவைதான் என்று நினைத்த சரீனா, பரிசோதனைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் தனது தவணையை எதிர்பார்த்துக் கொண்டிருந் தாள்.

சரீனாவின் கட்டிலை அண்மிய டாக்டர்களில் ஒருவர் கட்டிலில் தொங்கவிடப்பட்டிருந்த நோய், பரிகாரம் பற்றிய குறிப்புக்கள் அடங்கிய அட்டையை எடுத்துப் பார்த்தார்

''இப்போ எப்படி?... உடம்பிலே எதுவும் நோவுகள் இருக்குதா?''

எதுவுமே இல்லையென்னுமாப் போல, தலையை அசைத்து புன்னகைத்து விடை பகர்ந்தாள்.

'இண்டைக்கு வீட்டுக்குப் போகலாம். பிறகு ஏதும் பிரச்சினைகள் இருந்தால் கிளினிக்குக்கு வாருங்க...' என்று சொன்ன டாக்டர், ஏதோ எழுதிவிட்டு ஒரு புன்னகையை உதிர்த்தவாறு அடுத்த கட்டிலிலிருந்த நோயாளியைக் கவனிக்க நகர்ந்து கொண்டிருந்தார்.

இரண்டு வருட சிறைத் தண்டனையை அனுபவித்து விடுதலை பெற்றுவிட்ட ஒரு சிறைக் கைதியின் மகிழ்ச்சியைப் போன்ற மகிழ்ச்சியை, அந்த இரண்டு நாட்களும் அந்த 'வாட்'டிலே இருந்து கிடைத்த விடுதலையால் சரீனா அனுபவித்தாள். இருந்தாலும் சாலியின் நிலையை நினைத்தபோது அவளது உள்ளம் வேதனையடைந்தது. அவனை எப்போ போய்ப் பார்க்கலாம் என்ற ஆவல் மனதில் எழுந்து கொண்டேயிருந்தது. 'நர்ஸ்'மார் வந்து தன்னை விடு போக அனுமதிக்கும் வரை அந்த நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

சரீனாவை வீடு செல்ல அனுமதித்து 'டிக்கட்' வெட்டி யிருந்தாள் நர்ஸ். வீட்டிலிருந்து தன்னைப் பார்க்க அண்ணன்மாரும், தாய் தந்தையும் பகல் பன்னிரெண்டு மணிக்கு வந்துவிடுவார்கள். எப்போ பன்னிரண்டு மணிக்கு நோயாளரைப் பார்க்கும் நேரமாகும் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்திருந்தாள் சரீனா. அந்த எதிர்பார்ப்பு தன்னைப் பார்க்க வருபவர்களின் வருகைக்காக அல்ல.

''டாங்... டாங்... டாங்...''

நோயாளர்களைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கும் மணி ஒலித்துக் கொண்டிருந்தது.

சரீனாவின் கால்கள் இரண்டும் சாலி அனுமதிக்கப் பட்டிருந்த 'வாட்'டை நோக்கிப் போட்டி போட்டு நடந்தன.

சரீனாவின் கண்கள் குளமாகின. சரீனாவைக் கண்ட சாலியின் முகத்தில் ஒரு மலர்ச்சி. அவனது கண்களிலும் நீர் நிறைந்து, காதலுக்கு கண் இல்லை என்பதை நிரூபித் தன.

சாலியின் ஒரு கால் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட் டிருந்தது, அந்த வேதனையையும் பொருட்படுத்தாது. சரீனாவைக் கண்ட குதூகலத்தில் எழுந்திருக்க முயற்சித் தான்.

சில நிமிடங்களுக்கு அவ்விடத்திலே அமைதி நிலவியது. சாலி படுத்திருந்த கட்டிலைச் சுற்றி நின்றவர்களைப் பார்த் தாள், சரீனா. அவர்களும், அவளையே பார்த்தனர்.

அங்கே இக்பால் ஆசிரியர் நின்றிருந்தார். சாலி, சரீனாவை விரும்பியபோது அவளின் மதினி பாமிலா மூல மாக தன்னை திருமணம் செய்ய விருப்பம் கேட்டு வந்த அதே இக்பால் ஆசிரியர்தான் என்பதைப் புரிந்துகொள்ள, அவ்வளவு நேரம் பிடிக்கவில்லை சரீனாவுக்கு.

வயது முதிர்ந்த இருவர் நின்றிருந்தனர். அவர்கள் சாலியின் தாயும், தந்தையுமே என்பது சொல்லாமலே புரிந்தது. சரீனா தங்கியிருந்த வீட்டுக்கார அன்வர் ஹாஜி யாரும் அவரது மனைவியோடு வந்திருந்தார்.

சரீனாவுக்கு, இக்பால் ஆசிரியரின் முகத்தைப் பார்ப்ப தற்கும், இக்பால் ஆசிரியருக்கு சரீனாவின் முகத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதற்கும் சங்கடமாயிருந்தது. இக்பால் ஆசிரியரின் பார்வை; சரீனா மீது அவர் ஏதோ ஒரு வகை அனுதாபம் கொண்டவராக அவரைக் காட்டியது.

சாலி விபத்துக்குள்ளானதிலிருந்து, சரினா-சாலி காதல் விவகாரம் காட்டுத் தீ போல அப்பகுதியெல்லாம் பரவிவிட்டது. அதனால் அவள் யார் என்பதைப் புரிந்துகொள்ள, சாலியின் பெற்றேருக்கு அவ்வளவு நேரம் பிடிக்கவில்லை.

ஐந்து நிமிடங்ளவில் அவ்விடத்தில் தரித்துவிட்டு, அங்கு நின்ற எல்லோருடனும் விடை பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டு, தான் அனுமதிக்கப்பட்டிருந்த 'வாட்'டை நோக்கிச் சென்று கொண்டிருந்த சரீனாவை அவர்கள் எல்லோருமே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தனர். இக்பால் ஆசிரியரும், அப்படியே பார்த்துக்கொண்டு நின்றார்.

'வாட்'டுக்குச் சென்ற சரீனாவுக்கு பகல் சாப்பாடு எடுத்துக் கொண்டு தன்னைப் பார்க்க வந்திருந்த தனது அண்ணன்மாரையும், மதினி பாமிலாவையும் கண்டபோது, வெறுப்புத்தான் வந்தது.

# [11]

கண்டி பெரியாஸ்பத்திரியில் இருந்து சரீனாவை பேராதனையில் உள்ள அண்ணன் சாகிர்-மதினி பாமிலா வீட்டுக்கு அழைத்து வந்திருந்தார்கள். ஆனால், அவளுக்கு ஏனோ அங்கு இருப்பது என்பதை நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்தது.

சரீனாவை, அவளுக்கு அறிமுகமானவர்கள் வந்து பார்த்துச் சென்று கொண்டிருந்தனர்.

கண்டி வைத்தியசாலையில் இருந்து அவளை அழைத்து வந்த மூத்த அண்ணனும், இளைய அண்ணனும் சேர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலியை பூரணமாக மறந்துவிடும்படியும், ஒரு காலிழந்த முடவனை பட்டதாரியாகிவிட்ட ஆசிரியை சரீனா திருமணம் செய்வது எவ்வகையிலும் பொருத்தமில்லை என்றும் எச்சரித்தனர்.

தன்னை விரும்பியதற்காக ஒரு காலையும் இழந்து கண்டி பெரியாஸ்பத்திரியின் 'வார்ட்' ஒன்றில் தவிக்கும் சாலியைப் பற்றிய நினைவுடனேயே. கடந்த இரண்டு நாட்களையும் மிகவும் கஷ்டப்பட்டுக் கடத்தினாள் சரீனா.

அத்தோடு தன்னை திருமணம் செய்ய முன்பு விருப்பம் கேட்டுவந்த தனது மதினி பாமிலாவின் பாடசாலை ஆசிரியரான இக்பால் ஆசிரியருக்கும், சாலிக்கும் உள்ள தொடர்பு என்ன என்றும் யோசித்தாள். இது அவளுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

மாத்தறையில் இருந்து தான் விபத்துக்குள்ளான செய்தியை அறிந்து தன்னைப் பார்க்க வந்த தனது மூத்த அண்ணனும், பெற்றோரும் சாலியைப் பார்க்காமல் மாத்தறைக்குத் திரும்பிப் போனது, சரீனாவுக்கு மிகவும் வேதனையளித்தது.

சாலி தன்னை முதன் முதல் விரும்பியபோது தனது அண்ணனையும், தாய் தந்தையரையும் மாத்தறைக்குச் சென்று சந்தித்துக் கதைத்து அவர்களின் விருப்பத்தையும் அனுமதியையும் பெற்று எத்தவித சீதனமும் இன்றி திருமணம் செய்துகொள்வதாக அளித்த வாக்குறுதியையும், சாலியின் நேர்மையையும் நினைத்துப் பார்த்தாள் சரீனா, அப்படியான நல்ல உள்ளம் படைத்த ஒருவர், எதிர்பாராத விதமாக விபத்தில் காலொன்றை இழந்ததற்காக அவரையே மறந்துவிடும்படி தன்னை வற்புறுத்தும் தனது அண்ணன்மார் எப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகிகள் என்பதையும் நினைத்து அருவருப்படைந்தாள்.

இனிப் பாடசாலை தொடங்கினாலும், சரீனா பாடசாலைக்கு அருகாமையில் உள்ள அன்வர் ஹாஜியாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குப் போகக் கூடாது; அண்ணன் சாகிர் வீட்டிலிருந்தே பாடசாலைக்குப் போகவேண்டும், சாலியை அடியோடு மறந்துவிட வேண்டும்; இவைதான் சரீனாவின் மூத்த அண்ணன் கண்டிப்போடு போட்டுவிட்டுச் சென்ற கட்டளைகள்.

இளைய அண்ணன் சாகிரும், மதினி பாமிலாவும் பக்கத்தில் ஓடும் மகாவலியின் கிளையில் குளிக்கச் சென்றிருந்தார்கள். அவர்களின் பிள்ளைகள் இரண்டும், வீட்டில் இருந்தன. நேரம் காலை பத்து மணியாகிக் கொண்டிருந்தது. உடுபிடவைகள் எல்லாவற்றையும் கழுவி, உலர வைத்துக்கொண்டு குளித்துவிட்டு வழக்கமாக பகல் பன்னிரெண்டு மணியளவில்தான் வருவார்கள் பேனாவையும் வெள்ளைத்தாள் ஒன்றையும் எடுத்து கடிதமொன்றை எழுதத் தொடங்கினாள்.

'அன்புள்ள சகோதரர்களும், பெற்றோரும் அறிய வேண்டியது,

நான் எங்கும் போகவில்லை. என்னைத் தேடி நீங்கள் அலைய வேண்டியதுமில்லை. நான் அன்வர் ஹாஜியாரின் வீட்டிலேயே முன்பு இருந்த மாதிரி பாடசாலைக்குப் பக்கத்தில் இருக்கப் போகிறேன்.

ஆனால், நீங்கள் சொல்வது போல் என்னால் சாலியை மறக்க முடியாது. அப்படி மறப்பது நியாயமுமில்லை. சாலியை நான் திருமணம் செய்வதை நீங்கள் எல்லோருமே விரும்பிவிட்டு, இப்போது அவரை மறந்துவிடும்படி கூறுகின்றீர்கள். இது நியாயமா? நீங்கள் விரும்பவில்லை என்பதால், நான் அவரை மறக்கப் போவதுமில்லை, எனவே ஊர்ச் சலனங்கள் எம்மைப் பற்றி வீண் பேச்சுப் பேச அவர்களுக்கு இடமளியாது எம்மை சந்தோஷமாக வாழ்க்கையில் இணைத்து வைக்கும் முடிவோடு, என்னை வந்து சந்தியுங்கள்.

இப்படிக்கு,

அன்பு மறவாத சரீனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர அவசரமாகப் புறப்பட்ட சரீனா, கடிதத்தை தய்ண்ணன் சாகிரின் பிள்ளைகளிடம் கொடுத்து ''இதை வாப்யாக்கிட்டக் குடுங்க'' என்று சொல்லிவிட்டு வெளி யேறினாள்.

சரீனா கண்டி பெரியாஸ்பத்திரியை அண்மிக்கவும், நோயாளரைப் பார்ப்பதற்கு அனுமதிக்கும் நேரத்தை அறிவிக்கும் மணி ஒலிக்கவும் சரியாகவிருந்தது

சாலி தனது கட்டிலில் தலையணைகளை தலைமாட்டுப் பக்கமாக நிமிர்த்தி வைத்து, அதன் மேல் தனது முதுகுப் புறத்தைச் சாய்த்துவைத்தவாறு இருந்துகொண்டு, தன் னைப் பார்க்க வருபவர்களை ஆவலோடு எதிர்பார்த்தவ னாக இருந்தான்.

சரீனாவைக் கண்டதும் அவனது முகத்திலும், அகத் திலும் ஒரு மலர்ச்சி. இருவரது கண்களிலும் ஒரு கலக்கம்.

''சரீனா... நீங்கள் என்னை மனதார விரும்புகிறீர்களா என்று பார்க்க நான் உங்களைச் சோதிச்சேன். ஆனால் இறைவன் என்னைச் சோதிச்சுட்டான் சரீனா...எமது தொடர்பு ஏற்பட்ட பிறகு, நான் என்ட நெருங்கின நண்பன் இக்பால் மாஸ்டரை, அவர் உங்களை விரும்புகிற மாதிரி நானே திட்டமிட்டு அவரை அனுப்பி உங்களைச் சோதிச்சன் ஆனால், நீங்கள் காசு பணத் துக்கும் உத்தியோகத்துக்கும் மசியாது, உண்மையாகவே என்னை விரும்புறீங்க என்று அறிந்துகொண்டன். நீங்கள் என்ர பணத்தை விரும்புகிறீர்களா என்று திரும்பவும் சோதிக்கறதுக்காக எனது கடையை இன்கம்டெக்ஸ் டிபார்ட்மெண்டால் வரிப்பாக்கிக்காக சுவீகரித்ததாக, ஒரு வதந்தியை அன்வர் ஹாஜியார் மூலம் உங்களுக்கு அனுப்பி னன். அதிலும் உங்கட தீர்க்கமான முடிவு மூலம் நீங்க பணத்தை விரும்பவில்லை; என்னைத்தான் விரும்பு கிறீர்கள் என்பதை அறிந்து உள்ளம் பூரித்தன் சரீனா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இறைவன் என்னை இப்படிச் சோதிச்சிட்டான் சரீனா'...''.

கண்களில் நீர் மல்க, சாலி பேசிக்கொண்டிருந்தான்' சரீனா அவனைத் தேற்றிக் கொண்டிருந்தாள்.

''சரீனா...நீங்க ஒரு பட்டதாரி. ஒரு ஆசிரியை, முடவனாக்கிவிட்ட நான் உங்களுக்கு இனி எந்த வகையிலும் பொருத்தமற்றவன்...''பேசிக்கொண்டிருந்த சாலியை இடைமறித்தாள் சரீனா.

''நான் உங்கட உள்ளத்தைத்தான் விரும்பினேனே தவிர, உங்கட உருவத்தையோ, பணத்தையோ அல்ல. நான் திரும்பவும் சொல்லுறன் காதல் என்பது ஒரு முறை தான் மலரும். அந்த மலர் வாடி வதங்கிக் கீழே விழுந்து விட்டால், மீண்டும் மலரப் போவதுமில்லை; மணம் வீசுவதுமில்லை'' சரீனா ஒரு வைராக்கியத்துடன் பேசினாள்.

தமக்கு வயது முதிர்ந்துவிட்டாலும், இள வயதினரான சாலி-சரீனா ஆகியோரின் அன்புப் பிணைப்பைப் புரிந்து கொள்ளும் சக்தி தமக்குண்டு என்ற தோரணையில், சாலியின் பெற்றோர் அவர்களை நோக்கி ஒருவகை மகிழ்ச்சி கலந்த கவலையோடு வந்துகொண்டிருந்தனர்.

(முற்றும்)

(தினகரன் 'இதய கோலங்கள்' பகுதி - 1988, 1989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு, முஸ்லிம் மாதர் ஆராய்ச்சிச் செயல் முன்னணியினரால் தமிழில் எழுதும் பெண் எழுத்தாளர்களுக்கிடையே அகில இலங்கை ரீதியில் 1990-ம் ஆண்டு நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் மாத்தறை ஹஸினாவஹாப் எழுதிய 'சுமைகள்' எனும் சிறுகதைக்கு முதலாம் பரிசு கிடைத்துள்ளது. 1978-ம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமாகிய 'விடிவை நோக்கி . . .' எனும் சின்னஞ் சிறுகதை மூலம் எழுத்துலகுக்கு அறிமுகமாகிய இவரது முதற் சிறுகதையும் தினகரன் வாரமஞ்சரியிலேயே பிரசுரமாகிற்று. இவர் எழுதிய 'வதங்காத மலரொன்று' குறுநாவல் 1988-ம் ஆண்டு திகைரன் 'இதய கோலங்கள்' பகுதியில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. 1979-ம் ஆண்டு இலங்கையில் நடாத்தப்பட்ட நான்காவது அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மகாநாட்டையொட்டி; இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் இருபத்தியேழு பேரின் சிறுகதைகள், தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளியிடப்பட்ட, 'பிறைப் பூக்கள்' எனும் தொகுப்பில் ஹஸினா வஹாப் எழுதிய சிறுகதையும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. . .

(1991 03 17ந் திகதிய தினகரன் வாரமஞ்சரி செய்திக் குறிப்பும் இலங்கை வானொலி செய்தித்தாள் கண்ணோட்டமும்)

---

மாத்தறை ஹஸினா வஹ்ஹாப் ஆர்வமிக்க ஒரு எழுத்தாளர். 25க்கு மேல் சிறுகதைகளும், ஒரு நாவலும் எழுதியுள்ளார். அவரது 'ஹாஜியார் மாப்பிள்ளை' போன்ற கதைகளில் மாத்தறைப் பேச்சுத் தமிழை மிக பவ்வியமாக கையாள்கிறார். இவர் ஒரு பட்டதாரி ஆசிரியை.

இலக்கிய வேந்தர் அ.ஸ. அப்துஸ் ஸமது, பி.ஏ. (சிறப்பு) (முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு வெளியிட்ட 'வாழ்வோரை வாழ்த்துவோம் 1992' மலரில் பிரசுரமாகிய 'ஒரு நூற்றாண்டு கால முஸ்லிம் புனைக்கதைகள்' எனும் கட்டுரையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org